ஆனைப்பந்தி: புளியன்தீவின் நடுப்பாங்கரில் அமைந்த இடத்தின் பெயர் இதுவாகும். இவ்விடத்தில் பிள்ளையார் கோயில் ஒன்று உண்டு. ஆனைப்பந்தி என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் சில கிராமங்களுக்கு அமைந்திருக்கிறது. யானை கட்டப்பட்ட இடங்கள் என்பதே இதன் பொருள். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலங்களில் யானைகளை ஏற்றுமதி செய்வதற்காக அவற்றைக் காடுகளிற் பிடித்துவந்து இவ்விடங்களிற் கட்டிவைத்தனர். கட்டிவைத்த யானைகளுக்குத் தீன் போடவும் மக்களை அமர்த்தி வைத்திருந்தனர். அவ்வகையில் யானைகளைப் பராமரித்த மக்களைத் தனக்காரர் என்பர். ஆகையினுற்றுன் ஈழத்தில் ஆனைப்பந்தி என்ற பெயர் இருக்குமிடங்களின் பக்கலில் தனக்காரர் என்ற வகையினர் வாழ்ந்துவருவதை இன்றும் காண்டல் கூடும்.

பட்டிருப்பு: பார்த்திருப்பு என்ற சொல்லின் திரிபாகும். அரசன் தனக்குத் திறை கொண்டுவரும் வன்னியர்களை எதிர்பார்த்திருக்கும் இருப்பிடத்தைச் சிங்கள மக்கள் பார்த்திருப்புவ என்பர். மட்டக்களப்புப் பகுதி வன்னியர்மார் கண்டியரசுக்கமைந்து நடந்த காலத்தில் அரசன் அங்கு வந்து இருந்த இடமே பட்டிருப்பு என மருவலாயிற்று. கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டித்தாலத மாளிகையிலுள்ள அட்ட கோண மண்டபத்தைப் ''பார்த் திருப்புவ'' என்பர் கண்டி மக்கள்.

அம்பாறை: அம்பாள் — ஏரி என்ற இரு சொற்களுஞ் சேர்ந்து சிதைந்த பெயரே அம்பாறை ஆயிற்று. அங்கு அம்பாள் கோயி லும் குளமும் இருந்தனபோலும்.

பொத்துவில்: புத்தர் வெளி என்ற சொற்றொடர் சிதைந்து புத்த வெளி என்றாயிற்று. அது பின்னர் சிங்கள மக்களால் ''புத்தவில'' என அழைக்கப்பட அச்சிங்களப் பெயர் பொத்துவில் என்று தமிழாயிற்று. முருகப்பன் என்ற பெயர் ஆங்கிலத் தில் 'மோகப்பன்' என்றாகிப் பின் னர் தமிழிலும் மோகப்பன் ஆனது போல் புத்தவெளி சிங்களத்திற்குச் சென்று தமிழுக்குத் திரும்பியபோது பொத்துவில் ஆயிற்று.



இவ்வாறாக மட்டக்களப்பு இடப் பெயர் வரலாறு அமைந்துகிடப்ப தைக் கிராமங்களின் பெயர்களோடு ஒட்டிப்பார்த்துத் தெளிந்துகொள்ளு தல் வேண்டுமென்று கூறி இதனை முடிக்கலாயிற்று.

வித்துவான்
**F. X. C. நடராசா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநிலத்தின் மண்வளமும் பயிர்ப் பரம்பலும் பொருளாதார இணைப்பும்

மட்டக்களப்பு மாநிலம் வடக்குத் தெற்காக நீளக் கிடக்கும் ஒரு பிரதேசமாகும். இம் மாநிலம் இலங்கைத் தீவின் வரண்ட வலயத்திலுள்ளது. குறுகிய காலமாகிய ஒரு சில மாதங்களிற்தான் மழையைச் சூறு வளிக்காலநிலை அமுக்க அமைப்பிலிருந்து பெரும்பாலும் பெற்றுவருகின்றது. சூறுவளிகளின் விளைவிற்குக் காரணமாகிய வளி அமுக்க இறக்கங்களே இங்கு பெறப்படும் மழையில் பெரும் பகுதியினைக் கொடுக்கின்றன. இத்தகைய காலநிலையை ''நிலையற்ற காலநிலை'' யெனக் கருதுவதற்கு இடமுண்டு. அதாவது மழையினை நம்பிப் பயிரினை விளைவிக்கக் கூடாத ஒரு நிலை இதுவாகும். நம்புவதற்கு இடமளியாததும் சதா மாறிக் கொண்டே இருப்பதுமாகிய இக் காலநிலை நிரந்தரமான முறையில் பயிர்களைக் குறித்த காலத்தில் விளைவிப்பதற்கு உகந்ததாயில்லை. எனவே இத்தகைய காலநிலையில் முற்றுய்த்தங்கியிருக்கும் விவசாயம் நிலைபெற்ற பொருளாதார நிலையை உண்டு பண்ணுவதற்குப் பொருத்தமற்றதாயிருக்கின்றது.

இப்பிரதேசத்தின் மண்வளத்தினை நோக்குங்கால் இப் பிரதேசத்திற்கெனத் திட்டவட்டமாக அமைக்கப்பெற்றுள்ள மண்பரம்பல் படம் கிடைப்பதில்லை. ''மண் வளமும் காலநிலையும் தாவர வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத சாதனங்களாயிருக்கின்றன'' என்பது சேர் ஆதர் டீ கோள் (Sir A. D. Hall) என்னும் மண்ணியலறிஞரின் கூற்று. ஆதலின் நமது மாநிலத்தின் பொருளாதாரத்தினைச் சிரடையச் செய்வதற்கான ஏதுக்கள் எவை என்பதை ஆராய்வாம்.

முதலில்: இப்பிரதேசத்திற்கெனப் பெறப்பட்டுள்ள வானிலைத்தரவுகளும் காலநிலைத் தரவுகளும் மிகவும் அத்தியாவசியமாகும். ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்காவது தொடர்ச்சியாகப் பெறப்பட்டுள்ள காலநிலை, வானிலைத்தரவுகளை நாம் பெறுதல் வேண்டும்.

இரண்டாவதாக; இம் மாநிலத்தின் மண்வளத்தினையும் மண்பரம்பலையும் திட்பமாகக் காட்டக்கூடிய ஒரு தரை விபரப் படம் தாயாரிக்கப்பட வேண்டும். இப்படம் பெருமட்டாக அமைக்கப் பெற்றுள்ள படமாயிருக்கக்கூடாது. ஒவ்வொரு சதுர அடி நிலத்தினது மண்திறனையும் சரிவர இப்படம் உணர்த்தக்கூடியதாயிருத்தல் வேண்டும். இங்கிலாந்தின் மண் பரம்பற் படங்கள் ஒவ்வொரு 'கவண்டிக்கும்' எப்படி அமைக்கப் பெற்றிருக்கின்றனவோ அதே பாங்கில் நமது மாநிலத்தின் மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பற் படங்களும் அமைக்கப்பெற்றிருத்தல் அத்தியாவசியமாகும். இனி இப்படங்களில் ''நிரந்தரமண்'',''கொண்டு செல்லப்பட்ட மண்'' என்ற பிரிவுகளும் காட்டப்பட்டிருத்தல் நலம். இப்படங்களை அமைப்பதற்கு நமது சர்வகலாசாலைகளிலிருந்து வெளிவந்துள்ள பட்டதாரிகள் மிகவும் எளிதிற் பயிற்றப்படலாம்.

மேல் மண்ணின் திறத்தினை ஆராய்ந்து பரம்பற் படங்களை அமைப்பதுடன் அமைந்துவிடாது, ஒவ்வொரு சிறு பிரிவினதும் ''ஆழ மண் அமைப்பு முகங்கள்'' (Soil Horizons) தரப்படுதல் மிகவும் அவசியமாகும். ஏனெனில் ஒவ்வொரு மண்பிரிவினுக்கும் பொருத்தமான பயிர்வகைகளை நிச்சயப்படுத்தும் பொழுது அப்பிரிவிலுள்ள நிரந்தரப் பாறையியலைப்பற்றி அறிந்திருத்தல் அவசியம். இருபது வருட விவசாயத் திட்டமொன்றினை நாம் தயாரிக்கும் பொழுது தாவரங்களின் கீழ் அமையப் பெற்றுள்ள "ஆழப்பாறையமைப்பு முகம்'' மிகவும் தேவைப்படும்.

இம் மேல்மண்பரம்பற் படங்களும் ஆழப்பாறையமைப்பு முகங்களை உணர்த்திநிற்கும் விளக்கப்படங்களும் அமைக்கப்பெற்றபின், அம்மண்பரம்பல் அமைப்புகளுக்குரிய பயிர்வகைகள் அவற்றின் தேவைகருதி நிச்சயப்படுத்தப்படலாம். இதனைச் சரிவர முறையுறச் செய்வதற்கு மண்ணியலாராய்ச்சி இன்றியமையாததாகும்.

மண்ணியலாராய்ச்சி வல்லுனர் ஒவ்வொரு மண்பிரிவினுக்குமுரிய சிறப்பியல்புகளை இரசாயன அடிப்படையிற் கண்டறிந்தபின், விவசாய விற்பன்னர்களின் உதவியைக்கொண்டும், வளிமண்டல ஆராய்ச்சியாளரின் உதவியைப் பெற்றும் பயிர்ப் பரம்பற் பிரிவுகளை நிச்சயப்படுத்த முடியும்.

இனிப் பயிர் வகைகளை, காசுப் பயிர்கள், உணவுப் பயிர்கள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். நமது பொருளாதாரத்தினைச் சீர் பெறச் செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டக்கூடிய பயிர்கள் மிகவும் முக்கியமானவை. இதற்காக சணல், பருத்தி, பன், மூங்கில், எண்ணெய் விதைகள், முந்திரிப்பருப்பு போன்ற பயிர்களைச் செய்கை பண்ணுவதற்கான வசதிகள் எங்கெங்கு தென்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் அவற்றைச் சாகுபடி செய்ய வசதி அளித்தல் வேண்டும்.

உணவுப் பயிர்களைப் பொறுத்த மட்டில், நமது நாட்டில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களாகிய நெல், சோளம், குரக்கன், சாமை, இறுங்கு, பயறு, வெங்காயம், மரக்கறி வகைகள், பழவகைகள் போன்ற பயிர்களை உற்பத்தி செய்ய நாம் எத்தனிக்கலாம்.

இனி, பயிர் வேளாண்மையுடன் நெருங்கிய இணைப்பைப் பெற்றிருப்பது மிருக வேளாண்மையாகும். இதில் நல்லின மாடு, ஆடு, கோழி, வாத்து, தாரா, பன்றி, செம்மறி, மீன், இறால், தேனீ முதலியன வளர்த்தல் போன்ற முயற்சிகள் இடம் பெறலாம்.

வளமாக்கிகளை நாம் பெருமளவிற் பயன்படுத்திக் கொள்வதால் நமது மண் வளம் குறைந்து விடக்கூடிய நிலை ஏற்படக்கூடும். எனவே கூட்டுப் பசளை, மாட்டுச் சாணம், பச்சை இலைப் பசளை போன்றனவே மண் வளத்தினைப் பேணுவதற்கு மிகவும் உகந்தனவாயிருக்கின்றன. அத்துடன் பூச்சி புழுக்களைப் போக்குவதற்கு செயற்கை மருந்துகளைப்பார்க்கிலும் நம் நாட்டிலுள்ள சாம்பர், புகையிலைக் காம்பு ஊறவிட்ட நீர், போன்ற பூச்சி நாசினிகளைக் கண்டு பிடித்துப் பயன் படுத்திக் கொள்வதே நன்மை பயப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் பிரிவில் நடைமுறையிலிருந்து வரும் ''நிலஉரிமை'' முறை அடியோடு மாற்றப்படல் வேண்டும். ''தட்டு மாறி விதைத்தல்'' சிறு பரப்புகளாக நிலத்தினைத் துண்டுபோட்டுச் செய்கை பண்ணுதல், போன்ற பொருளாதாரத்தினைச் சீர்படுத்துவதற்கு முட்டுக்கட்டைகளாயிருக்கும் பழைய வழக்கங்கள் கைவிடப்பட வேண்டும்.

காணிகள் பொருளாதாரத்திற்குகந்த அலகுகளாக இணைக்கப்பட்டபின் அவற்றினைக் கூட்டுறவு முறையிற் செய்கை பண்ணலாம். இம்முறையானது மிகவும் விரிவாக ''டாக்டர் சில்லர்'' (Doctor O. Schiller) அவர்களால் (Vide F. A. O. Report No. 228) அவரது அறிக்கையில் எடுத்தாளப் பெற்றுள்ளது.

நமது நெற்காணித் திட்டமும், சட்டமும் ஓரளவில் நல்லவைதான். ஆனல் விவசாயியின் நேர்மையை அவை பாதித்து விடுகின்றன. நிலச் சொந்தக் காரனை ஏமாற்றுவதில் குத்தகைக்காரன் முனைந்து நிற்கின்றான். நிலச் சொந்தக் காரனின் நிலத்தினை அவனிடமிருந்து அபகரிப்பதற்கு, இச்சட்டமானது குத்தகைக் காரனைத் தூண்டி விடுகின்றது. தனிமையான சொந்த உரிமையினைப் பேணிக்கொள்வதற்கும், கூட்டுறவு முறையில் நிலத்தினைச் சீர் திருத்தமான முறையிற் சாகுபடி செய்வதற்கும் டாக்டர் சில்லரின் திட்டம் இடமளிக்கின்றது. அது மாத்திரமன்றி அத்திட்டத்திற் சோம்பேறிகளுக்கும், ஏமாற்றுக்காரருக்கும், நேர்மையினின்று திறம்பியவர்களுக்கும், விவசாயத்தில் ஊக்கமில்லாதவர்களுக்கும் இடமில்லை. அத்துடன் மிகக் கூடிய நிலப்பரப்பினை உடைய நிலச் சொந்தக்காரனுக்கும் இத்திட்டம் இடமளிக்கின்றது. நிலச் சொந்தக்காரன் கூலியாட்களைப் பயன் படுத்திக் கொள்வதற்கும் இடமுண்டு.

மட்டக்களப்பு மாநிலத்திற்கெனத் தயார் செய்யப்பட்டதுபோல், டாக்டர் சில்லரின் திட்டம் அமைக்கப் பெற்றிருக்கின்றது. போக்குவரத்து வசதிகளும் விற்பனவு வசதிகளும், பொருள் வினியோகத் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும் மேய்ச்சற் தரை வசதிகளும், இப்பிரதேசத்தின் விவசாயத் சீர்திருத்தத்திற்கு இன்றியமையாதனவாயிருக்கின்றன.

இவையனைத்தினையும் டாக்டர் சில்லர் தமது அறிக்கையில் நயம் பெற எடுத்தாளுகின்றனர்.

க. கணபதிப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Agricultural Potentials of The Batticaloa District.

The extent of the Batticaloa District is a little over 1,000 sq. miles. The Batticaloa and Valaichchenai lagoons divide the major part of the District into two from North to South. The major part of the total population of 230,000 in the District is concentrated in the narrow strip between the sea and the two lagoons.

2. The soils in the Eastern side of the lagoons are sandy regosols on recent beach and sand dunes. To get a sucessful Annual Agricultural crop on these soils, heavy manuring with organic manures is necessary. Due to the obvious difficulty of irrigating these crops on such soils which have a very poor water retention capacity, and due to the high cost of irrigation, it is uneconomical to cultivate these crops in this area. The crops for which this area is suitable, are Coconuts and in very poor soils, Cashew.

3. The Major part of the Western shore of the lagoons consists of alluvial soils of varying texture, mostly sandy loams and small areas of clayey loams. In between these alluvial soils there are small patches of noncalcic brown soils and alkali and saline soils of varying texture.

4. This area is very sparsely populated, the population being concentrated in small hamlets found in the scattered highlands in the vast extent of low-lying areas eminently suited for paddy cultivation. About 90% of the total paddy area in the District is found here.

5. The total aswedumized paddy land in the District is 110,000 acres, about 1/12th of the paddy acreage in the island. Of this about 63,600 acres are entirely rainfed. As adequate rain at the appropriate time is a factor beyond human control, planned cultivation and obtaining maximum harvest from this large extent of rainfed paddy land are very uncertain. When there is such a real risk attached to the output, the peasant cultivator is reluctant to spend his energy or hard earned or borrowed capital for adequate outlay? Even the 38,600 acres under Major irrigation schemes in the District are dry sown during the Maha season owing to inadequate water supply available in the irrigation tanks at the beginning of the season. The cultivator under these conditions has to fight hard against heavy weed growth in the paddy fields.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALERIC'S DELICIOUS

AND

# NUTRICIOUS ICE CREAM

ALERIC'S ICE CREAM IS MADE OF PURE AND FRESHLY DRAWN COW MILK DRAWN DAILY FROM ALERIC'S OWN DAIRIES. REMEMBER TO OBTAIN ALERIC'S ICE CREAM FOR ALL YOUR PARTIES.

## ALERIC'S ICE CREAM CO.,

No. 45, Galle Road,

WELLAWATTE.

Telephone: **84115**.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவித

தெளி கருவிகளுக்கும்



# ஹெய்லி லிமிட்டட்,

**400, டீன்ஸ் வீதி,**

**கொழும்பு**

என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Of the 22,600 acres cultivated during the Yala Season 3,700 acres are under Minor Irrigation Schemes. The water available in the Minor Tanks is not sufficient to cultivate a 4-month crop. Even for a 3-month crop, the water in these tanks has to be supplemented with rainfall during April. In case there is a failure of the April rains, there is often a crop failure.

7. As the population is concentrated in the East of the lagoon, the labour and materials for the cultivation of paddy lands in the West have to move from the East to the West during the cultivation season. Non-availability of proper transport facilities in the Western side, due to poor roads, is a major obstacle to the Agricultural progress of this District. Absence of Agricultural roads through large paddy tracts causes hardship in the transport of Agricultural materials to fields. 80% of M. P. C. S. S. which serve the cultivators are concentrated in the thickly pupulated Eastern side and the cultivators are unable to derive full benefits from these societies.

8. Intensification of Agricultural Extension Activities, has given promising results. The average yield in Maha 1965/1966 which was 32 bushels per acre, has increased to 46.48 bushels in Maha 1968/1969, an increase of 41% in 4 years. Education of the farmers on proper tillage, use of high yielding improved varieties of paddy, weed control, proper use of artificial fertilizers and pest and disease control compounds, through Demonstrations, Field Days and Farmer Training Classes, is the main reason for this achievement under the very unfavourable conditions stated earlier.

9. With further intensified farmer Education activities it is not difficult to bring the yield under Major Irrigation Schemes, to 80 bushels per acre and the average for the District to 60 bushels per acre during the Maha Season and 80 to 90 bushels per acre during the Yala season. With the programme for restoration of Village tanks being given full effect and the extension of the Gal-Oya Left Bank Channel to Unnichchai tank, it is not difficult to get yields averaging 100 bushels per acre.

10. HIGHLAND CULTIVATION

The Eastern shore of the lagoon is suited only for permanent crops like Coconut, Cashew and Mangoes. The present acreage under Coconuts is about 18,647 acres and the acreage under Cashew 566 acres. With the alienation of a large acreage of marginal land available in this region for Cashew Cultivation and a subsidy scheme for the Cultivation of this crop, this crop is expected to be a very good source of income for the District. Though the actual acreage under Mangoes is not known, the acreage is not less than 200 acres. Castor will be another suitable crop for this area. The Coconut estates need replanting and proper management to obtain economic yields from them. The cultivation of Onions and Chillies and Home Gardens can be undertaken successfully in small plots close to wells in this area.

11. An increase in the acreage and production of Chillies, Ground Nuts and Pulses can be achieved if Irrigation facilities in the form of Food Production Wells and pumps to highland allotments in the District, as well as

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

proper transport facilities to Kallichai, Vadaimunai, Kongalla, Pothana, Perilla-veli and Mayaveddai areas in the Korala Pattu D. R. O's Division are provided. The Irrigation facilities can be provided by installing tube wells wherever possible.

12. The highland allotments in the Gal-Oya Left Bank colonisation scheme would be a very high potential area for these crops if Irrigation facilities are improved. At present the Irrigation facilities in this area are very unsatisfactory as this area is at the tail end of the Gal-Oya Left Bank Channel and most of the water is illicitly tapped by colonists in the upper reaches.

13. Another direction in which the cultivation of subsidiary food crops can be expanded is in the 60,000 acres of paddy lands left uncultivated during the Yala season. Green Gram, Cow-peas and Gingelly can be grown successfully in these fields making use of the rainfall in March and April.

14. The area adjoining the Verugal River is very suitable for the cultivation of Subsidiary Food Crops, Pineapples and Plantains, provided arrangements are made for "Lift Irrigation" from the river. This area is also suitable for rearing Livestock on a large scale.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. ஆர். 8

## அதிசய நெல்

## கொண்டுவரப்பட்டுள்ளது.

உச்ச விளைச்சலைப் பெற்றுக்கொள்ள
பின்வரும் வளமாக்கிக்
கலவைகளைப் பிரயோகிக்குக.

**பயிரிடமுன்னர் அடிக்கட்டாக :-**

224 இரு. செறிவுச் சுப்பொசுபேற்று
112 இரு. பொற்றுசு மூரியேற்று
112 இரு. அமோனியம் சல்பேற்று அல்லது 56 இரு. யூறியா.

**முதலாம் மேற்கட்டு :-**

336 இரு. அமோனியம் சல்பேற்று அல்லது 168 இரு. யூறியா.

**இரண்டாம் மேற்கட்டு :-**

224 இரு. அமோனியம் சல்பேற்று
112 இரு. யூறியா
56 இரு. அல்லது அதற்குமேல் பொற்றுசு மூரியேற்று.

## இலங்கை பசளைக் கூட்டுத்தாபனம்

746, கல்டிகொட் கட்டிடம்,
**காலி ரோட், : கொழும்பு - 4.**

தொலைபேசி இல: 83336–7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENHANCE THE BEAUTY OF YOUR HOME

WITH

**PLYWOOD PRODUCTS**

—★—

# Ceylon Plywoods Corporation

420, BAUDDHALOKA MAWATHA,
COLOMBO - 7.

# Eastern Industrial Corporation

Specialists in

★ **Kattankudy Sarees & Shirtings**

★ **Dyeing & Printing in Textiles in fast colours.**

Factory :
**83, Mosque Road.**
**New Kattankudy 3,**
**Kattankudy.**

Sales Depot :
**No. 6, 2nd Cross St.,**
**Batticaloa.**
Phone: 365 Ext.

Office :
**1, 2nd Cross Street,**
**Batticaloa.**
Phone: 365.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මඩකලපු දිස්ත්‍රික්කය පිළිබඳ හැඳින්වීමක්

**සිසිර මලලසේකර,**
රජයේ වැඩ දෙපාර්තමේන්තුව,
මඩකලපුව.

**ඓතිහාසික පසුබිම:**

සිංහල රජදරුවන් සමයෙහි මෙම දිස්ත්‍රික්කය උඩරට රාජධානියෙහි කොටසක් වශයෙන් පාලනය කරනු ලැබූ අතර, එකල මඩකලපුව හැඳින්වූයේ 'පුලියන්දූව' යනුවෙනි. සද්ධාතිස්ස කුමරුන් විසින් ක්‍රි. ව. 101 වැන්නෙහිදී මෙම ප්‍රදේශය, දීඝවාපියේ සිට පාලනය කරන ලද බව ඉතිහාසයෙහි සඳහන්ය. එකල දීඝවාපිය හැඳින්වූයේ 'කොණියාකච්චිකුලම්' යනුවෙනි. ලංකාවේ බටහිර ජාතීන්ගේ පාලන සමය ඇරඹුණු පසු පෘතුගීසීන් විසින් 1622 දී මඩකලපුව අල්ලාගත් අතර, 1939 දක්වා බලයෙහි රැඳී සිටියහ. ලන්දේසි සේනාව පෘතුගීසීන්ට පහර දී මඩකලපුව හා ත්‍රිකුණාමලය අල්ලාගත්තේ 1638 මැයි මාසයේ දී ය. වර්තමාන දිසාපති කාර්යාලය පිහිටා ඇත්තේ ලන්දේසීන් විසින් ඉදිකරන ලද මඩකලපු කොටුවෙහිය. කොටුවේ පිටතින් මුහුද දෙසට හරවා සවිකරන ලද ලන්දේසි කාලතුවක්කු අද වුවද දකින්න හැක. බ්‍රිතාන්‍යයන් විසින් මඩකලපුව අල්ලා ගන්නා ලද්දේ ක්‍රි. ව. 1795 සැප්තැම්බර් මාසයේ දී ය. ලංකාවේ දිගම පාලම්වලින් එකක් වන කල්ලඩි පාලම ඉදිකරන ලද්දේ බ්‍රිතාන්‍ය යුගයේ දී ය. මඩකලපුවෙහි ඉදිකර ඇති ලන්දේසි ගොඩනැගිලිවලින් ඔවුන්ගේ ගෘහ නිර්මාන ශිල්පය පිළිබඳව උගතහැකි දේ අපමණය,

**භූගෝලීය පසුබිම:**

ඒරාවූර් පත්තු, එරුවිල් පෝරතිව් හා දකුණු මන්මුනෙයි, උතුරු මන්මුනෙයි, කෝරලපත්තු, බටහිර මන්මුනෙයි යන ප්‍රාදේශීය ආදායම් නිලධාරි කොට්ඨාශ අයත්වන්නේ මෙම දිස්ත්‍රික්කයටය. මඩකලපු නගරය ලංකාවේ නැගෙනහිර වෙරළේ ත්‍රිකුණාමලයේ සිට සැතපුම් 84 ක්ද බදුල්ලේ සිට සැතපුම් 103 ක්ද ඈතින් පිහිටා ඇත. ලංකා සිතියමෙහි නැගෙනහිර වෙරළ දෙස බලන්නෙකුට මඩකලපුව අසල ඇති චමත්කාර ජනක දූපත් රාශියක් දැක්ක හැකිය.

වර්ෂාපතනය ගැන සලකා බලන විට වියලි කොටස්වල සමහර ස්ථානයන්හි වාර්ෂික වර්ෂාපතනය අඟල් 50 ටත් අඩුවේ. නිරිතදිග මෝසම් සුළං කාලයේ දී මෙම වියලි ප්‍රදේශවල දීඝී කාලයක් තිස්සේ වර්ෂාව රහිත ශුෂ්ක කාලයක් පවතී. සාමාන්‍යයෙන් අධික වර්ෂාව ලැබෙන්නේ සැප්තැම්බර් සිට ජනවාරි දක්වා වූ කාලය තුලය. අවුරුද්දේ වැඩි කාලයක් වර්ෂාව නොමැති කම ප්‍රදේශයේ ශාක වර්ධනය කෙරෙහි බලපාන සාධකයකි. දේශගුණයේ කටුකතාවය ජනගහනයේ පැතිර යාම සහ දියුණුව කෙරෙහි තදින්ම බලපාන්නකි. භූගෝලීය පසුබිම වූ කලී කිසියම් ප්‍රදේශයක කෘෂිකාර්මික ව්‍යාපාරවල හා ජනගහනයේ ව්‍යාප්තිය කෙරෙහි මහත්සේ බලපාන කරුණකි. නිරිතදිග මෝසම් සුළං මගින් ලංකාවේ තෙත් කලාපයට මෝසම් සමයේ දී අධික වර්ෂා පතනයක් ලබා දීමට සමත් වුවද එම කාලයේ දීම මඩකලපු ප්‍රදේශයෙහි වියලි දේශගුණිකත්වයක් ඇතිකිරීමේ ප්‍රධාන හේතුව එම සුළඟ ලංකාවේ නැගෙනහිර ප්‍රදේශයට ළඟා

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වන විට ජල වාෂ්ප ශූන්‍ය වියළි සුළඟක් බවට පත්වීමයි. 'කචාන්' සුළඟ යනුවෙන් හැඳින්වෙන්නේ මෙයයි. මෙම සුළඟ නැගෙනහිර දිගල කාලේ අධික උෂ්ණත්වය හා අවුරුද්දේ වැඩි කාලයක් පවතින වියළි බව කෙරෙහි බලපාන සාධකයකි.

**ජනගහනය:**

1963 වර්ෂයේ ජන සංගනනය අනුව මෙම දිස්ත්‍රික්කයේ මුළු ජනගහනය 196, 090 කි. දිස්ත්‍රික්කයට අයත් භූමි ප්‍රමාණයේ විශාලත්වය ගැන බලන විට ජනගහනය අල්ප බව පෙනේ. 1963 වර්ෂයේ දී සාමාන්‍යයෙන් ජනගහනයේ ඝණත්වය අනුව වර්ග සැතපුමකට ජනගහනය 207ක් බව සංඛ්‍යා ලේඛණවල සඳහන් වේ. ජාතීන් අනුව බලන කල ලංකා දෙමළ, ලංකා මුස්ලිම් දෙවර්ගය වැඩි වශයෙන් ජීවත් වෙති. නගරසභා සීමාවතුල ඇති ජයන්තිපුර ජනපදයේ සිංහල පවුල් සෑහෙන ප්‍රමාණයක් ජීවත්වන අතර, කල්මුණේ සිට මඩකලපුව දක්වා වූ කොටසේත් කාතාන්කුඩි ගම්මානයේත් අධික වශයෙන් සිටින්නේ මුස්ලිම් ජාතිකයෝය. ලංසි හා යුරේසියානු ජාතිකයන්ගේ ප්‍රමාණයද ලංකාවේ අන්‍ය ප්‍රදේශවල එම ජාතිකයන්ගේ ගණනට වඩා වැඩිය. පෘතුගීසීන්ගෙන් හා ලන්දේසීන්ගෙන් පැවත එන බොහෝ දෙනා ජීවත්වන්නේ මඩකලපු නගරය ආසන්නයෙහිමය.

**ජීවනෝපාය මාර්ග:**

දිස්ත්‍රික්කයේ ජීවනෝපාය මාර්ග ගැන සලකා බලන විට මුල්තැනක් ලැබෙන්නේ ධීවර කර්මාන්තයට හා වී වගාවටය. මාලු බෙදාහැරීම සඳහා ලංකා ධීවර සංස්ථාවේ ශාඛාවක්ද පිහිටුවා ඇත. ධීවරයෝ කුඩා ඔරු වලින් ගොස් කලපුවේ මාලු, දැල් දමා අල්ලන අතර, නැගෙනහිර වෙරළේ සිට මුහුදුයාම සඳහා කුඹවත්ව පිළියෙල කරගත් ඔරු හා යාන්ත්‍රික බෝට්ටු ප්‍රයෝජනයට ගනිති. වාරකන් සමයේ දී ඔවුහු දකුණු වෙරළ කරාද යති. කුම්බලාවෝ, බෝල්ලෝ, කටුවල්ලෝ, අත්ජීලාවෝ, පරවියෝ, සාවාලයෝ, හාල්මැස්සෝ සහ ඉස්සෝ මෙහි අල්ලන මාලු වර්ග වෙති. ඉස්සන් වඩාත් ජනප්‍රිය වී ඇත. ඉස්සන් අල්ලා පිටරට යැවිය හැකි දැයි සෙවීමට වරින්වර පර්යේෂණ පැවැත්වූ බවද සඳහන්ය. මුහුදෙන් කලපුවට එන ඉස්සෝ ජනවාරි, පෙබරවාරි, හා මාර්තු මාසවලදී අධික වශයෙන් ධීවර දැල්වලට හසුවෙති. පොල්වගාවද මෙහි සාමාන්‍යයෙන් කෙරේ. රෙදි විවීමද මෙහි වැදගත් ජීවනෝපාය මාර්ගයකි. මීට අමතරව දැව කර්මාන්තයෙන් ලබන ප්‍රතිඵලද බොහෝය. පලු, බුරුත, ගම්මාළු ආදී අගනා ගස්වර්ග ගෘහභාණ්ඩ සෑදීමට ගනු ලැබේ.

වී වගාව මඩකලපු දිස්ත්‍රික්කයේ වැදගත් ලෙස කෙරෙන ජීවනෝපාය මාර්ගයකි. 1965 වර්ෂයේ මාස් කන්නයේ අක්කර 74, 529ක්ද යල් කන්නයේ අක්කර 20, 14ක්ද වී වගාකර ඇත. වර්ෂයේ වර්ෂා පතනය ලැබීමේ ප්‍රමාණය අනුව මෙය වෙනස් වූවද, වී ගොවිතැන සඳහා සකස්කර ඇති අලුත් ඉඩම් ප්‍රමාණය දැනටමත් වැඩිවී ඇත. ගොඩ ගොවිතැනද මෙහි සාමාන්‍ය වශයෙන් කෙරේ. හේන් ගොවිතැන් කරන ප්‍රදේශවල බටු, මිරිස්, අල, බතල ආදිය වගා කෙරේ. එපමණක් නොව වෙළඳාමෙහි යෙදී සිටින පිරිසද විශාලය. ප්‍රධාන ජීවනෝපාය මාර්ග ගැන සිතන විට මඩකලපු දිස්ත්‍රික්කයේ වර්තමාන දියුණුව උදාරතර අනාගතයක ලකුණු පෙන්නුම්කරන බව වටහාගත හැකිය.

**කෘෂිකාර්මික හා සංවර්ධන ක්‍රම:**

කෘෂිකාර්මික හා සංවර්ධන යෝජනා ක්‍රම ගැන සිතා බලන විට මෙම දිස්ත්‍රික්කයේ පිහිටා ඇති මහා ගොවි ජනපද හා සුළු ගොවි ජනපද ව්‍යාපාර ගණන සුළුපටු නොවේ. 1966 වර්ෂය අවසන් වන විට අක්කර 1348 ක ඉඩම් ප්‍රමාණයක් උන්නිච්චි ව්‍යාපාරාදිය යටතේ ගොවීන් අතර බෙදා දී ඇත. මෙයින් අක්කර 800ක් පමණ බිම් ප්‍රමාණයකට වාරිමාර්ග පහසුකම් සලසා ඇති අතර මෙය සීඝ්‍රයෙන් දියුණුවේගෙන යන ව්‍යාපාරයක් වශයෙන්ද



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හැඳින්විය හැක. වඩුමුනෙයි ව්‍යාපාරයේ අක්කර 405 ක ප්‍රමාණයක් කට්ටිකාරුවන් අතර බෙදා දී ඇත. ජලය ලැබෙන්නේ වඩුමුනෙයි ජලාශයෙනි. කිරිතිව්විබෙයි ව්‍යාපාරය හා කට්ටුමුරිච්චි ව්‍යාපාරයද මඩකලපු දිස්ත්‍රික්කයේ මහා ගොවිජනපද ව්‍යාපාර ලෙස සැලකේ. පුනානි ව්‍යාපාරයේ කුඹුරු අක්කර ප්‍රමාණය අනෙකුත් ව්‍යාපාරවල මෙන්ම වැඩිය. තැනින් තැන නිවෙස් ඉදිකරගෙන ඇති ඉඩම් හිමියන්ට විශාල වශයෙන් ආධාරද ලැබේ. මෙම ව්‍යාපාරයේ සමහර කට්ටිකරුවන්ට අක්කර 5 බැගින් බෙදා දී ඇත. මෙම කරුණු අනුව බලන කල නවීන ක්‍රමානුකූලව ගොවිතැන් කටයුතු කිරීමේ හා සංවර්ධන ව්‍යාපාරයෙහි මුල්තැන ගෙන ක්‍රියා කිරීමෙන් අවශ්‍යතාවය මෙම ගොවි ජනපද වාසීන් හට වැටහි අවසානය. මෙම හේතුවෙන් අළුත් දියුණුවක එල, වැඩි කාලයක් යන්නට මත්තෙන්ම, නෙලාගත හැකිව පවතී.

## ගමනාගමන පහසුකම්:

මේ ගැන සලකා බලන විට පෙර පැවති තත්ත්වයට වඩා මෙම දිස්ත්‍රික්කයේ මාර්ගවල දියුණුව උසස් බව සැලකිය යුතුය. ගොවි ජනපදවලට හා කෘෂිකාර්මික ව්‍යාපාරවලට යාම් ඊම් සඳහා මහා මාර්ග ඉදිකිරීමේ වැඩ පිළිවෙල සියයට සියයක්ම සාර්ථක ලෙස රජයේ වැඩ දෙපාර්තමේන්තුව ක්‍රියාත්මක කරයි. ලංකාවේ ප්‍රධාන නගර බොහෝ ගණනකට යා හැකිවන අයුරින් සීඝ්‍රගාමී බස්රථ සේවයන්ද සංවිධානය කොට ඇත. ජනගහනයේ පැතිර යාම හා ප්‍රදේශයේ උන්නතිය ගැන සිතන විට, එවැනි පෘථුල සේවයක් නොමැතිව අලුත් දියුණුවක් දැකීම අසීරු බව අවබෝධවෙයි. දුම්රිය සේවයද මෙහිලා සෑහෙන ප්‍රමාණයක කොටසක් ඉටුකරයි. මේ හැර විශේෂයෙන්ම සඳහන් කළ යුත්තේ මඩකලපු දිස්ත්‍රිකයේ පාලම් පාරු සේවාව ගැන ය. නැගෙනහිර ප්‍රදේශයේ මඩකලපුවට ආසන්න කුඩා දූපත්වලට යාමටත් එම දූපත් හා සම්බන්ධව ඇති මහා මාර්ගයන්ට ඇතුල්වීමටත් ඇති ප්‍රධාන බාධකය නම් තැන තැන හමුවන කුඩා ගංගාවන් හා නගරය සිසාරු පැතිරුණු කලපුවත්ය. පාලම් මගින් මාර්ග ඒකාබද්ධ කිරීම ඉතා දුෂ්කර කාර්යයක්ව ඇති හෙයින් පැන්නුම් පාලම් හා පාලම් පාරු සේවය මගින් එයට සහාය ලබාගෙන ඇත. මේ අන්දමට ජනතාවගේ ප්‍රයෝජනයට මහා මාර්ගයක වාහනවලින් සිදුවන සේවයට නොදෙවෙනි සේවයක් පාලම් පාරු ඉටුකරයි. මෙය වැඩි වශයෙන් වී ගොවිතැනටද රුකුලක්ව පවතී. ඇත කැලෑබද ගම්වල ජීවත්වන ගොවීන්ගේ හා වෙළඳුන්ගේ ජීවන රටාව කෙරෙහි එක එල්ලේම බලපාන්නේද මෙයයි.

## ආගමික හා සංස්කෘතික කටයුතු:

මඩකලපු දිස්ත්‍රික්කයේ විශේෂයෙන් දක්නට ලැබෙන ආගමික හා සංස්කෘතික ලක්ෂණ මෙසේ විමසා බැලිය හැකිය. ජනගහනයෙන් වැඩි කොටසක් හින්දු ආගමිකයෝ වෙති. ඊළඟට වැඩි ජන සංඛ්‍යාවක් අදහන්නේ මුස්ලිම් ආගමයි. රෙපරමාදු, රෝමානු කතෝලික ක්‍රිස්තියානි යන ආගම් අදහන පිරිස්ද වෙති. ලන්දේසි සහ බ්‍රිතාන්‍ය ජාතිකයන්ගෙන් පැවත එන්නෝ බොහෝ කොට මෙම ආගම් අදහති. කුඩා ලූර්දු නමැති කතෝලික දේවස්ථානයක් කාතාන්කුඩි ගම්මානයේ පිහිටා ඇත. ප්‍රදේශයේ එක්තරා ගම් පෙදෙසක ඇති මහා ලූර්දු දේවස්ථානයේ සිට ගෙන්වනු ලබන ශුද්ධ ජලය මෙහි ඇත. එම ජලය වසංගත රෝග හා යක්ෂ දෝෂද දුරුකිරීමට සමත් බවත් එවැනි හාස්කම් සහිත ශුද්ධ ජලය නිසා මෙම දෙව්මැදුර කතෝලිකයන් අතර ප්‍රසිද්ධව පවත්නා බවත්, මෙහිලා කිව යුතුය. නගරයේ ඇති මංගලාරාම බෞද්ධ විහාරය මූලස්ථානය කොට නම් ආගමික කටයුතුවල නිරතවන බෞද්ධයෝද සැලකියයුතු සංඛ්‍යාවක් මෙම ප්‍රදේශයේ වාසය කරති. ආගම කුමක් වුවද මෙම පෙදෙස් වැස්සෝ තම ආගම් කෙරෙහි උපන් අචල භක්තියකින් කටයුතු කරති. සංස්කෘතික කටයුතු ගැනද විශේෂ උනන්දුවක් දක්වන මෙහි



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

උත්සව පැවැත්වීමේ දී හා මහජන කට යුතුවලදී ජාති ආගම් භේදාදියෙන් තොරව ඉදිරිපත්වීමද වැදගත් ලක්ෂණයකි

**සොබා සොඳුරු බව:**

දිස්ත්‍රික්කයේ අගනුවර වන මඩකලපු නගරයේ පිහිටීම මන තන්දනීය බව නොරහසකි. මෙහි ඇති විශේෂ ලක්ෂණය නම් මෙම පෙදෙස කුඩා දූපත්වලින් සමන් විත වීමයි. මීන් විශාලම දූපත පුලියන්තීව් යනුවෙන් හැඳින්වේ. මෙම ප්‍රදේශයෙහි ඇති දිසාපති කාර්යාලය අසලට යන්නෙ කුට කලපුවෙන් එහා කාතාන්කුඩි ගම්මානයේ සරුවට වැඩුනු පොල්වතුද පෙනෙයි. ඈත සිහිජයන්, මෑත කල්ලඩි පාලමත් අතරින් යාන්තමට පෙනෙන මුහුදු දිය රැලි අස්සෙන් බැස යන සැඳෑ හිරු රැස් දකින විට රසික සිතුවිලි ඔකද වෙයි. සාමාන්‍යයෙන් නැගෙනහිර ලංකා වේ මුහුදු වෙරළද විශේෂයෙන් මඩකලපු නගරවරයද, ප්‍රියංකර භාවයෙන් අනූන බව කාට වුවද සිතාගත හැක. මෙරට පමණක් නොව පිටරට විනෝදකාමීන්ගේ පවා රසිකත්වය පහගන්වන සුළු ඒ සොබා සොඳුරු බව අප කවුරුත් අගේ කළ යුතුය.



# நினையுங்கள்

இந்த முறை நல்ல விளைச்சல்,
செழிப்பான பயிர், செலவும் குறைவு.
பிள்ளைகளுக்கு பட்டிணி இல்லை.
நாட்டுக்கும் செலவு மிச்சம்... ஊம்...
விவசாயத்தைப் பற்றி நினைக்க
ஷெல் விவசாய இரசாயனங்களை, ஷெல்
குரோமோ உரங்கள் நினைவுதான் வரும்.
ஷெல் இரசாயனப் பொருட்கள்
விளைச்சலைப் பெருக்குவது மாத்திரமல்ல
பயிர்களையும் பூச்சி, புழுக்கள், நோய்,
களை, அண்டாமல் பாதுகாக்கின்றன.
இதற்காகவே இவை கணிக்கப்
பட்டு நல்ல நுணுக்கமாய்
பரீட்சிக்கப்பட்டு சிபார்சு
செய்யப்படுகின்றன.

# ஷெல் இரசாயனங்கள்

2049-83-9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "HEALTH IS WEALTH"

Keep "White" with MILKWHITE

Always use

**MILKWHITE BLUE SOAP**
which is HANDY

**MILKWHITE BAR SOAP**
which is ECONOMICAL

and the

**MILKWHITE WASHING POWDER**
which is thrifty.



## EASTERN PROVINCE AGR. CO-OP. UNION LTD.,
(TRACTOR STATION)

**BATTICALOA.** & **KARAITIVU.**
Tel: 257. Tel: Nintavur 10.

Dealer for
MASSEY - FERGUSON TRACTORS & IMPLEMENTS

**SALES ★ SERVICE ★ SPARES**

Oxygen & Electric Welding Undertaken.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Economic Development of Batticaloa

by
**Kantha Retnam.**

In 1918, R. A. J. Festing, while being stationed in Batticaloa, in his capacity as Government Agent of the Eastern Province, was constrained to observe that the frequent assertion to the effect that no improvement had taken place in the Batticaloa District for well over a hundred years, was, to a large extent, true. [1] He went to the extent of adding that as far as progress in Ceylon was concerned, the Batticaloa District was in all probability at the bottom of the table. [2] How could it have been otherwise, when some of the state's servants here had to perform free services, unlike in many other Districts? Headmen, for example, had not been in receipt of salaries.[3]

That the development of this district was relatively slow even during British times is distressing, for according to Lennox A. Mills of the University of Minnesota, the promotion of the prosperity of the districts counted among the foremost functions of British Government Agents and Assistant Government Agents.[4]

There was absolutely no valid ground for the neglect of the development of the Batticaloa district under British rule, as it was making an appreciable contribution [5] to revenue. Recipients of land grants had to, on the instructions of Frederic North, give the government one-tenth of the produce after benefiting from a tax holiday of five years. Land revenue realised in 1811 amounted to three and a half times the collection of just five years before. Production of cloth too enabled the government to levy a tax. In the circumstances, recognition of the value of Batticaloa could not long be delayed.

The industriousness of the people of the district had caught the eye of Pridham who prophesied that the development of its agricultural potential would earn for Batticaloa town the recognition it richly deserves.[6] The

1. Festing, R. A. J., "Foreword" in Canagaratnam S. O.: Monograph of The Batticaloa District (Colombo, H. R. Cottle, Government Printer, Ceylon, 1921, page v.
2. ibid, page vi.
3. Silva, Colvin R. de: Ceylon Under the British Occupation 1795 — 1833 (Colombo, The Colombo Apothecaries' Co. Ltd., 1962), Volume 2, page 343.
4. Mills, Lennox A.: Ceylon Under British Rule 1795 — 1932 (Colombo, K. V. G. De Silva & Sons, 1964), page 96.
5. Silva, op. cit, pages 358, 368 and 523.
6. Pridham, C.: Ceylon and Its Dependencies (London, T. & W. Boone, 1849 ii. 562 - 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1833 reforms which marked the ascendancy of Trincomalee over Batticaloa by the stationing of a Government Agent in the former station and only an assistant in the latter[7] had not taken into account the growing importance of Batticaloa. Remedial action was taken in 1870 when the headquarters of the Eastern Province was shifted to Batticaloa.[8] Trincomalee then had to remain content with an Assistant Government Agent.

The opening up of lands for Agriculture[9] was the key feature of the development plans that the British had had for the Batticaloa district. This is evident from the construction of the Unnichchai Tank in 1919. But the establishment of the colony near it had to wait till 1946 when it had the good fortune to precede the grant of independence to Ceylon by just two years.

The British rulers realised that the communications too were essential for the economic development of the district. 1924 saw the publication of Sessional Paper 5 which pointed to the promise of extending the railway line from Batticaloa to Nintavur.[10] That track is yet to be. If the British had not relied far too much on boats[11] to carry goods between the southern part of the district and the provincial capital at an average speed of seven and a half miles an hour, Batticaloa would not be in the sorry plight of being inaccessible to vehicular traffic during the height of the north-east monsoon.

After independence, a factory for the manufacture of paper was built at Valaichchenai in the northern part of the district. Since 'illuk' (Imperata arundinacea) and paddy straw were to be the chief raw materials of production - materials which were available in plenty in the neighbouring area – it is pleasing to observe that the government of the day decided against the establishment of the factory in the Colombo district which was favoured by some foreign experts.[12] The availability of a large indigenous labour force and extensive local supplies of paddy straw have served to demolish the foundation of gloomy forecasts.

The construction of the aerodrome by the army, with assistance from the Public Works Department, was a great boon to the people of Batticaloa. The subsequent opening of the airport to passenger traffic foresees the possibility of air-freight of cargo.

The opening of a branch of the People's Bank has brought additional benefits to the capital-starved peasant

7. Silva, op. cit, page 592.
8. Canagaratnam, op. cit, pages 19 and 23.
9. Farmer, B. H. Pioneer Peasant Colonization In Ceylon (London, Oxford University Press, 1957) pages 121 and 147.
10. ibid, page 122.
11. Canagaratnam, op. cit, page 71.
12. Mission organised by the International Bank for Reconstruction and Development: The Economic Development of Ceylon (Baltimore, The Johns Hopkins Press, 1953), pages 284, 568, 569 and 570.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cultivators who are expected to make a significant contribution to food production in a predominantly agricultural district. This district capital was denied the services of the People's Bank till some small towns in other districts had been provided with them.

In the Kalkudah electorate in the northern part of the Batticaloa district, the construction of a bridge is expected to promote economic activity. The preliminary steps taken recently towards the realization of this objective show faith in the belief that provision of adequate communications should precede the economic upsurge of an area.

The extension of the railway track southwards would be of great benefit to the Batticaloa district. The Lady Manning Bridge spanning the Batticaloa Lagoon was expressly built for this purpose. The Mission to Ceylon from the International Bank for Reconstruction and Development noted in 1951 that while the estimated cost of laying a thirty mile railway track to Nintavur was only sixteen million rupees, an alternative route southwards would involve the government in an expenditure of over a sum of thirty million rupees.[13]

Another welcome step the Government might take, would be to establish an institution for imparting technological knowledge. As far back as 1951, the World Bank Mission gave expression to the expectation of the government to erect a Technical College in Batticaloa.[14]

What Batticaloa needs is a Technological University on the Loughborough model.[15]

Another need is the popularization of Batticaloa as a tourist resort, for foreigners, who have had the good fortune to come here, have never ceased to raise hallelujahs concerning everything they had heard, seen, and fallen in love with, in this town lapped by waters harbouring the Singing Fish. One of them was Martin Wintergerst of Memmingen in Swabia, Germany. His travels took him among other places to St. Malo, Plymouth, Lisbon, Marseilles, Gibraltar, Alicante, Genoa, Sicily, Malta, Venice, and Amsterdam. His records, however, show that conditions similar to those in paradise prevailed in Batticaloa.[16] Its picturesque setting should be made known to the world by the Tourist Board by means of articles and photographs. If the newly constructed hotel is inadequate to accommodate the resultant influx of tourists, the Rest House may be enlarged lengthwise so as to cover the unfenced triangular plot of land lying beyond the eastern end of the Rest House.

---

13. Mission Organised by the International Bank for Reconstruction and Development: op. cit, pages 648 - 649.
14. ibid, page 780.
15. The reference here is to the Loughborough University of Technology in Leicestershire, Great Britain.
16. Wintergesrst, Martin, "The Wandering Swabian" in Raven-Hart, Major R. (Trans. & Ed.) Travels in Ceylon 1700 — 1800 (Colombo The Associated Newspapers of Ceylon Ltd., 1963), page 78.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி

மட்டக்களப்பு பாலும் தேனும் நெய்யும் பொங்கிவழியும் பொன்னு டெனப் பண்டைக்காலம்தொட்டே புகழ்பெற்றுள்ளது. இதனுடைய இயற்கை வளமும், செவ்வனே அமைந்துள்ளது. அடர்ந்து படர்ந்துள்ள காடுகளின் மத்தியிலே அமைந்துள்ள 'தளவாய்ப் புற்றரைகளும்' அவற்றையண்டிச் சிலுசிலுத்து வற்ருது ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளும், மாடு ஆடுகள் மேய்வதற்கும், உறங்குவதற்கும் ஏற்ற இடங்களாக அமைந்துள்ளன. இவ்வியற்கை வனப்பைக் கொண்டே நம் முன்னேர்கள் தங்கள் மாடுகளை செந்நெல் விளையும் வயல்களுக்கண்மையிலுள்ள தளவாய்களில் வளர்த்து வந்தார்கள். வயல்களில் அறுவடை முடிந்ததும், மாடுகளை வயல்களிற் காலைபோட்டு எருவுக்காகக் கட்டியும்வந்தனர். கோடை, மாரியின்றி, புல்லுக்குப் பஞ்சமில்லாமல் தங்கள் மாடுகளை நன்றே பராமரித்து நற்பயனடைந்தும் வந்தனர் இந்நாட்டு மக்கள்.

ஆனல், மந்தைகளை விருத்தி செய்து அவற்றிடமிருந்து அடையும் பலாபலன்களைக் கூட்டுவதற்கோ, அதிகரிப்பதற்கோ அவர்கள் முயற்சி எடுக்கவில்லை. தூய இரத்த அபிவிருத்தியின்றி மந்தைகள் உள்விருத்தியே (In-breeding) அடைந்து வந்தன. இதனுல், காலத்தின் கரத்தில் எமது கால் நடைகள் சிறியவையாகவும், கோத்திரம் குன்றினவையாகவும் அமைந்துவிட்டன. அத்துடன் மக்கள் குடியேற்றத்திட்டங்களும், அதிக நெல் பயிரிடுக இயக்கமும் மந்தை வளர்ப்பின் ஆர்வத்தைக் குன்றச் செய்துவிட்டன. நாட்டிற்குகந்த அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெரு கால் தீட்டப்படாது இருந்தமையால், காலப்போக்கில் எமக்கு வேண்டிய பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றைப்பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1968ம் ஆண்டின் புள்ளி விபரப்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கால்நடைகளின் தொகை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| பசு | — | 50,268 |
| எருமை | — | 24,293 |
| ஆடு | — | 17,403 |
| பன்றி | — | 422 |
| கோழி | — | 124,574 |
| தாரா | — | 954 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலிருந்து நாம் அடையும் நாளாந்தப் பலன்கள்:-

பசுப்பால் — 14,957 போத்.
எருமைப்பால் — 12,776 போத்.
கோழி முட்டை — 15,538

இவற்றைவிட மாதமொன்றுக்கு 500 பசுமாடுகளை இறைச்சிக்கெனக் கொழும்பு, கண்டி போன்ற பட்டினங்களுக்கு ஏற்றுவதுடன் சராசரி 300 மாடுகளும் இப்பகுதி மக்களின் இறைச்சித் தேவையைப் பூர்த்திசெய்வதற்கென அறுக்கப்படுகின்றன. மேற்கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிபரத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பதால், இலங்கையின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதுடன், தனிப்பட்டோர் பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்கு உகந்த ஏதுக்கள் இருப்பதை அறிகிறோம்.

தேசிய அரசாங்கம் 1955ம் ஆண்டில் இலங்கைக்குகந்த ஐந்தாண்டு விவசாய விருத்தித் திட்டமொன்றை நிர்ணயித்து, அதன் பிரகாரம் இலங்கையில் எல்லாப்பகுதிகளிலும் விவசாய விருத்தித்திட்டம் மாத்திரமன்றி, கால்நடை விருத்தித்திட்டங்களையும் உருவாக்கிற்று. வரண்ட பிரதேசம் எனக்கூறப்படும் எமது மட்டக்களப்புப் பிராந்தியத்தின் முன்கூறிய ஏதுக்களை அடிப்படையாகக்கொண்டு பால்,இறைச்சி (ஆடு,மாடு, கோழி, பன்றி), முட்டை போன்ற உணவுப் பொருட்களை அதிகமாக உற்பத்தியாக்கத் திட்டங்களும் கையாளப்பட்டன.

**பாலும் இறைச்சியும்**

எமது நாட்டில் பண்டைக்காலந் தொட்டுக் குளங்களையண்டியே மாடுகள் வளர்க்கப்படுகின்றன. இக் குளங்களினண்மையிற் பிரத்தியேகமாக, மேய்ச்சல்தரை அமைந்துள்ள 'தளவா'யில் தற்போது திருந்திய முறைக் காளை ஸ்தானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காளை ஸ்தானத்திலும் ஐந்து தூய இந்திய இனமாகிய சிந்தி, தர்பாக்கார், சகிபால் காளைகள் உண்டு. இக்காளைகள் நாட்டுப்பசுக்கள் மேயும் இடங்களுக்குத் தினமும் கொண்டுசெல்லப்பட்டு அப்பசுக்கள் சினைப்படுவதற்காக விடப்படுகின்றன. இதனுல் குறுகிய உருவமும் குறைந்த பாலும் தரும் நாட்டுப்பசுக்களிலிருந்து உருவத்தில் பெரிதும்,அதிக பாலைத் தரக்கூடியதுமான கலப்பினச் சந்ததியை உற்பத்தியாக்கக்கூடியதாயிற்று. இப்படிப்பட்ட திருந்தியமுறைக் காளை ஸ்தானங்கள் கதிரவெளி,மாங்கேணி வாகனேரி, உறுகாமம், ஆயித்தியமலை, தும்பங்கேணி, கடுக்காமுனை, மண்டூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களிலும் இது போன்ற காளைச் சேவை நிலையங்கள் அமைக்கப்படும். தூய இனக்காளைகளின் உபயோகத்தைத் திட்டப்படுத்தும் பொருட்டு, காளை ஸ்தானங்கள் அமைந்துள்ள இடங்களிலும் அவற்றின் சுற்றுடல்களிலும் உள்ள நாட்டு நாம்பன் மாடுகளைக் கட்டாயமாக நலமடிக்க வேண்டும். இன்றேல் வயது வந்த நாம்பன் மாடுகளை இறைச்சிக்காக விற்றுவிடலாம்.

மந்தைச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்டுள்ளவாறு, மாடுகள் யாவும் தக்கவிதிப்படி குறியிடப்பட்டு, பிரிவுக்காரியாதிகாரி அவர்களின் ஆதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில், கிராம சேவையாளர் உதவியால் பதிவு செய்யப்படுகின்றன.

இம்முறையில் குறிசுடுதல் மாடுகளுக்கு அதிக துன்பத்தை விளைவிக்காதிருப்பதுடன், மாட்டுத்தோலின் தரத்தையும் பெறுமதியையும் உயர்த்தி, மாடுகள் களவு போவதையும் கட்டுப்படுத்துகின்றது.

பட்டினங்களிலும், அவற்றை யண்டியுள்ள இடங்களிலும் வளர்க்கப்படும் மாடுகளை விருத்தி செய்யும் பொருட்டு பசுக்களை செயற்கை முறையில் சினைப்படுத்தும் ஒரு ஸ்தாபனம் மட்டக்களப்புக் கால்நடை வைத்தியர் கந்தோரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பசுக்கள், காளைகளைத் தேடும் அறிகுறிகளைக் கண்டதும், சொந்தக்காரர் சினைப்படுத்தும் ஸ்தானத்திற்கு அறிவித்தால், குறைந்த செலவில் அதிக உயர்ந்த இனத்தைக் பெறக்கூடியதாயிருக்கும்.

கிராமப் புறங்களிலுள்ள வயல்களில் காலைபோட்டுக் கட்டி வரும் பசு, எருமை, மாடுகளை விருத்தி செய்வதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. இதன் பிரகாரம் பசு இனத்தை விருத்தி செய்யச் சிந்தி, தர்பாக்கார், காளைக் கன்றுகளையும் எருமை மாடுகளை விருத்தி செய்ய முறா காளைக் கன்றுகளையும் கால்நடை மாற்றீட்டுத்திட்டத்தின்கீழ் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளலாம். முறா இன எருமை மாடுகள் சாந்தகுணமுடையவை, அதிக பாலைத் தரக்கூடியவை. அத்துடன் நம் நாட்டு எருமை இனம் போன்று சதா தண்ணீரில் உறைவதைத் தவிர்த்து, வெய்யிலையும் வெப்பத்தையும் தாங்கக்கூடியவை. இதன்படி 1966ம் ஆண்டிலிருந்து 1969ம் ஆண்டுவரை 39 காளைகள் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மந்தை வளர்ப்போருக்கு குடியேற்றத்திட்டங்களால் ஏற்பட்டுள்ள மேய்ச்சல் தரை தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கும், மேய்ச்சல் தரைகளின் தன்மையையும், தரத்தையும் உயர்த்துவதற்கும் வழிவகைகள் கையாளப்பட்டுள்ளன. மாவட்ட அதிபரின் தலைமையில் இயங்கும் மட்டக்களப்பு விவசாயக் குழுவில் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்டமையின் பயனாக கீழ்க்காணும் இடங்களில் மேய்ச்சல் தரைகள் ஒதுக்கி அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கோறளைப்பற்று:-**
பேரில்லாவெளி, தரவை, மாதவனம், ஓமடியாமடுக்குளம், களனியாமடுக்குளம், தோணிதாண்டகுளம், அம்பளத்தனவெளி, மாங்கேணி, வெள்ளாமைச்சேனை.

**ஏறுவூர்ப்பற்று:-**
கொட்டுக்காச்சி, அக்கரத்தெவ்வானை.

**மண்முனை வடக்கும் மேற்கும்:-**
குதம்பா, குறவன்திடல், திவிலானை, புழுகுநாவி, ஆயித்தியமலை.

**மண்முனை தென் எருவில் போரதீவுப்பற்று:-**
நவகிரிஆறு, புழுகுநாவி, திவுளானைக் குளங்களுக்கிடையிலுள்ள பூமி, தும்பங்கேணி.

சமயக்கட்டுப்பாடின்றி உணவாகக் கொள்ளக்கூடியது ஆடு, கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் இறைச்சியே. போசாக்குச் சத்துக்கூடிய மாமிச உணவின் தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாக ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி உற்பத்தியைப் பெருக்கவும் வழிவகைகள் கையாளப்பட்டுள்ளன. நமது நாட்டில் உள்ள ஆடுகளோ மிகவும் சிறியவை. ஒரு ஆடு சுமாராக 60—80 இருத்தல் நிறையுடையது. இதனை இறச்சியாக மாற்றும் பொழுது 40—60 இருத்தல் இறைச்சியையே பெறமுடியும். இதனல் ஆதாயம் குறைவதுடன் தேவைக்கு வேண்டிய அளவு இறைச்சி கிடைப்பதும் அரிதாகிறது. நம் நாட்டிலுள்ள ஆடுகளை யமுனுப்பாறி, பங்களூர்ரி போன்ற கடாக்களுடன் கலக்கவிடுவதால் உருவத்தால் பெருத்திருப்பதும் அதிக இறைச்சி, பால் ஆகியவற்றை இலகுவில் தரக்கூடியதுமான ஒரு கலப்பு இனத்தை உற்பத்தியாக்கலாம். விஞ்ஞான ஆராய்ச்சிமூலம் 'புறயிலாஸ்' (Broilers) என்னும் ஒரு கோழி இனத்தை உற்பத்தியாக்கியுள்ளார்கள். இக்கோழி ஒவ்வொன்றும் நான்கு இருத்தல் தீனி சாப்பிடுவதின் நிமித்தம் உயர்தரமுள்ள ஒரு இருத்தல் இறைச்சியை உடம்பில் உண்டாக்கும் பண்புவாய்ந்தவை. இதனல் குறுகிய கால எல்லையில் நவீன முறைகளைக் கையாண்டு தேவைமிக்கதும் போசாக்குடையதுமான கோழி இறைச்சியை உற்பத்தி செய்யமுடியும். இக்கோழிகளைக்கால்நடை வைத்தியர் மூலம் கரண்டக்கொலையிலுள்ள மத்திய கோழி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறலாம்.

பன்றியிறைச்சியை யாம் காடுகளிலிருந்தே தற்சமயம் அதிகம் பெறுகிறோம். பட்டினங்களில் உள்ள சோற்றுக்கடைகளிலும், எமது வீடுகளிலும் கழிக்கப்படும் உணவுகளைப் பன்றிகளுக்கு உணவாகஅளிக்கலாம். வளர்க்கும் பன்றிகளுக்கு தவிடு,பிண்ணுக்குப்போன்ற உணவுகளுடன் கழிவு உணவைக்கலந்து கொடுப்பதால் பன்றி இறைச்சியைக் குறைந்த செலவில் உற்பத்தியாக்க முடியும். இதற்கு வெலிசறை அரசாங்கப் பண்ணையிலிருந்து 2 — 3 மாத சீமை இனமாகிய ''லாச்வைட்'' (Large white) '' வேக்சயர் '' (Berkshire) போன்ற பன்றிக்குட்டிகளைக்கொடுத்துதவுகிருர்கள்.

**முட்டை**

கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் மட்டக்களப்பில் ஒரு 'பொரிப்பு நிலையம்' ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் அதிக முட்டைகளை இடக்கூடிய இனங்களாகிய ஆர்.ஐ.ஆர்., வெள்ளை லெக்கோன், ஒஸ்ரலொப், வயிற்செக்ஸ், தூய இனக்கலப்பினங்களாகிய ஒஸ்ருேவைட், 'ருே-வைட்'போன்ற கோழிக்குஞ்சுகள் வினியோகம் செய்யப்படுகின்றன. மாதமொன்றிற்கு 2,800 கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. இவை அவ்வப்பகுதி விவசாயப் போதனுசிரியரின் அனுசரணையுடன் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கொண்டுபோய் விற்கப்படுகின்றன. 'கரண்டக்கொலை' மத்திய கோழி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பேட்டு, சாவல் குஞ்சுகளும் வரவழைக்கப்பெற்று விநியோகிக்கப்படுகின்றன. பட்டினங்களில் கனகூள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலும் கிராமங்களில் வீட்டுப் புறங்களிலும் கோழிகள் வளர்ப்ப தில் மக்களை ஊக்குவிப்பதின் நிமித் தம் கடந்த மூன்று ஆண்டுகளும் 17,028 கோழிக்குஞ்சுகள் விநியோ கம் செய்யப்பட்டுள்ளன. இதனுல் எமது நாட்டு மக்களின் உபயோ கத்திற்கு வேண்டிய முட்டைகளை எமது நாட்டிலேயே உற்பத்தியாக்கு வதுடன், வயதுசென்ற பெட்டைக் கோழிகளையும், சேவற் கோழிகளை யும் இறைச்சிக்கு உபயோகப்படுத்த வும் ஏதுவாயிருக்கிறது.

**வைத்திய சேவை**

கிருஷிக இலாகாவின் தாபரிப் பில் ஒரு மத்திய கால்நடை வைத் தியசாலை மட்டக்களப்பு பயனியர் வீதியில் அமைக்கப்பெற்றுள்ளது. கால்நடைகளுக்கு ஏற்படும் உடல் நோய்களுக்கு வைத்திய, சத்திர சிகிச்சைகள் இங்கே செய்யப்படுகின் றன. மாடுகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான், வாய் நோய், குரைநோய் போன்ற தொற்றுவியாதிகளையும் கோழிகளுக் கேற்படும் படுவான்,அம்மை போன்ற வியாதிகளையும் தடுப்பதன் நோக் கத்துடன் கிராமரீதியாக கால்நடை வைத்திய உதவியாளர்கள் தடையூசி மருந்துகள் பாய்ச்சுகிருர்கள். அத் துடன் கால்நடைகளை விஞ்ஞான ரீதியில் வளர்த்து நவீன முறையில் உணவூட்டி அவைகளிடம் இருந்து பெறும் பலாபலன்களை அதிகரித்துக் கொள்ளும் வழிவகைகளும் பொது மக்களுக்குப் புகட்டப்படுகின்றன.

வருடமொன்றிற்கு நோய்த் தடுப்பு மருந்து பாய்ச்சப்படும் மிரு கங்களின் சராசரி எண்ணிக்கை மேல் வருமாறு:-

*மாடுகள்:—*
தொண்டை அடைப்பான் — 10,700

*மாடுகள்:—*
வாய் - குரை நோய் — 2,178

*கோழிகள்:—*
படுவண் நோய் — 26,000

*கோழிகள்:—*
அம்மை நோய் — 18,000

இதனுல் மேலே குறிப்பிட்டுள்ள தொற்று வியாதிகள் இம்மாவட்டத் திலுள்ள கால் நடைகளுக்கேற்படு வது குறைக்கப்பட்டுள்ளது. இவை களைப் பொதுமக்கள் நன்கு கவனித்து அரசாங்கம் இலவசமாக வழங்கும் உயர்ந்த ஆலோசனைகளையும், உதவி களையும் பயன்படுத்தி, தங்கள் பொருளாதாரம், செல்வ வளம் என்பவற்றை உயர்த்திக்கொள்வ தோடு இத்தகைய தேசீய அபிவிரு த்திப் பணிகளிலும் ஒத்துழைப்பார் கள் என்று எதிர்பார்க்கின்ருேம்.

**வி. சிவலிங்கம்**
அரசாங்க மிருக வைத்தியர்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு நெற் செய்கையின் பண்டைய மரபு

மட்டுநன்னாட்டின் தென்பகுதி வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கும் கடலேரியால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் அப்பிரிவுகள் எழுவான்கரை, படுவான் கரை என வழங்கப்பட்டு வருகின்றன. படுவான் கரை முழுவதும் நெல்விளையும் பரந்த கழனிகள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை விசாலித்துக் கிடக்கின்றன. இக் கழனிகளில் நம்மூதாதையர் பண்டுதொட்டுக் கைக்கொண்டுவந்த நெற்செய்கை முறைகள் இப்பொழுது படிப்படியாகக் கைவிடப்பட்டு வருகின்றன. அம்முறைகளை எடுத்து இயம்பவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஏர்நாள்;—

சோதிடர்கூறிய சுபநாளில் உழவர்தத் தம் வயல்களுக்குச் சென்று, பொங்கல், பூசைகள் செய்து கடவுளை வணங்கித் தம் தொழிலைத் தொடங்குவர். காணி உரிமையாளராகிய போடிமார் தம் ஒவ்வொரு வட்டைக்கும், உழவர் குழுக்களை நியமிப்பர். அவர்களுள் அனுபவமும், ஆற்றலும் மிக்க ஒருவர் ''முல்லைக்காரர்'' எனப்படுவர். அவரே அந்த வயல்வேலை முழுவதற்கும் உத்தரவாதமுள்ளவராவர். அவரது தலைமையில் இயங்கும் உழவர்குழுவினர் மேற்கூறியபடி சுபதினத்தன்று ஒன்றுகூடி 'ஏர்நாள்' செய்வர். வயல்களுட் காணப்படும் ''வக்கடை''களைக் கட்டி நீர் வெளியிற் செல்லாது தடுப்பர். பின்னர் வயல்களுள் எருமைகளை இறக்கி மிதிவேலையை ஆரம்பிப்பர்.

மிதிவேலை:—

''நாளதுகேட்டு நார்க்கம்புவெட்டி
நல்ல கடாக்கள் தெரிந்து பிணைத்து''

நல்ல நாளில் யாவரும் அயலிலுள்ள காடுகளுக்குச் சென்று ஆத்தி, நறுவிலி மரங்களிலிருந்து நார் உரித்து அவற்றை முறுக்கித் திரித்தகயிற்றினால் எருமைகளைப் பிணைத்து ''சிலுவுதண்ணீராய்'' உள்ள வயலில் இறக்குவர். ஒருவர் சுமார் எட்டு மாடுகளை வரிசையாகத் தொடுத்து வயலை மிதித்துச் சேறுக்க, ஏனையோர் வரம்புகட்டுதல், பெரிய முறிவுகள் கட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுவர். மாடுகள் இசையில் இடுபட்டு நடப்பதற்காக, அவற்றின் பின்னால் செல்வோர் '' தாற்றுக்கோலை ''த் தோளில் வைத்துக் கொண்டு பின்வருவன போன்ற பாடல்களைப்பாடுவர்.

''முன்னங்கால் வெள்ளையல்லோ —
செல்லனுக்கு
முகம்நிறைந்த சீதேவி
மானோடுந் தூரமெல்லாம் — செல்லா நீ
தானோடவல்லவனே
செல்லன் நடந்த நடை — இன்று
சொல்ல வொண்ணு அன்ன நடை
இந்த நடைதானோ — செல்லனுக்கு
இன்னமுண்டோ அன்ன நடை''

பிற்பகல் சுமார் ஒரு மணி, இரண்டு மணிவரை இவ்வாறு பாட்டுக்கள் பாடி, மாடுகளைக் கொண்டு வயல் சேறுக்கப்படும்.

கால்புதையும் களித்தரையில் நீருள் மண்ணை வெட்டி எடுத்துச் சென்று வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலுள்ள முறிவுகட்டுவதற்காக 'இல மண்கை' என்னும் தட்டு உபயோகிக்கப் படும். சுமார் பத்து அடி நீளமான இரு பாரமற்ற தடிகளின் நடுவில் அகலமான சலாகைகளை இணைத்துத் தட்டுப்போல் கட்டி, முன் ஒருவர் பின் ஒருவராக நின்று, கைத்தூக்காக மண்ணை எடுத்துச் சென்று முறிவுகட்டுவர்.

இப்பகுதி வயல்கள் நீண்டு பரந்த நிலப் பரப்பைக்கொண்ட காரணத்தால், நாற்று நடும் வழக்கம் அக்காலத்தில் இருக்கவில்லை. நெல்முளைகளை, பண்படுத்திப் பரம்படித்த வயல்களில் விதைக்கும் வழக்கமே இன்று வரை நடைமுறையில் இருந்துவருகின்றது.

காவல்முறை:—

பயிரேறியவுடன் வட்டை விதானை, வட்டை அதிகாரி என்போர் பரந்த வயல் வெளி அனைத்தையும் உள்ளடக்கிச் சுற்றிக் கதிகால் வேலி கட்டுவதற்கு, ஏக்கர் வீதப்படி அளந்து கொடுப்பார்கள். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் கமக்காரர் உரிய முறைப்படி, ஒரு சாணுக்கு மூன்று கதிகாலாகக் குத்திநட்டு, நான்கு வரிச்சுகளும் கட்டி அவ்வவர் வேலிகளின் அருகிற் காவற் பரண்களும் அமைப்பார்கள். இவ்வாறு செய்யத் தவறுவோர் வட்டை விதானையால் நீதித்தலத்திற் தண்டிக்கப்படுவர்.

கதிர்கள் முற்றி அறுவடைகாலம் நெருங்க நெங்கக் காவலும் மிக்க சிரத்தையுடன் நடைபெறும். ஒரே கண்டமாகவுள்ள பரந்த வட்டையைச் சுற்றி உள்ள நூற்றுக்கணக்கான பரண்களிலும் உழவர் ஒவ்வொருவரும் மாலை ஏழுமணிக்கே காவல் புரியச் சென்றுவிட வேண்டும். அவ்வேளை வட்டை அதிகாரி என்பார் முதலாவது பரணிலுள்ளவரிடம் வந்து பின்வரும் 'வியளத்தை' (செய்தியை) உரத்துச் சொல்லுமாறு பணிப்பர். உடனே அந்தக்காவலாளர் அடுத்தபரணிலுள்ளவரை விழித்து,

''பொழுதுபட்டு ஒரு சாமமாய்ப்
போயிற்றும்
காவலுக்கு வந்தவர் வராதவர்
யாரென்று தெரியாதாம்
இரண்டுதலைவேலிக்கும் கொத்து
இழுத்துக்கொடி இழுத்து
மிக்க எச்சரிக்கையான காவல்
பார்க்கட்டாம்
நாளைக்காலையில் வட்டவிதானையும்
வட்டை.
அதிகாரியும் வட்டை வளைத்து
வருவார்களாம்
தனியன்பன்றி உள்பட்டால்
மூன்று அடியாம்
கிளைப்பன்றியுள்பட்டால்
பன்னிரண்டு அடியாம்
மாடுஉள்பட்டால்
பன்னிரண்டு அடியாம்
இந்தச் சத்தம் ஓரவேலிக்குப்
போனவுடனே
எல்லாரையும் ஒரேசத்தமாகக்
கூ என்னட்டாம்''

இவ்வாறு இவர் கூறியபடியே அடுத்த பரணில் உள்ளவர் இவ் "விடயத்தை"க் கூற அது ஒவ்வொருவராலும் கூறப்பட்டு 'அவ்வியளம்' தொங்கலில் உள்ள பரணைச் சேரும். பின் அங்கிருந்து யாவரும் ஒன்றுபட்ட குரலில் "கூ" எனச் சத்தமிடுவர். 'வியளம்' சொல்லி இரண்டு மணித்தியாலங்களின்பின் மேற்படி அதிகாரி, தமது ஆணைக்கோலாகவுள்ள ஒரு நீண்ட தடியை முதலாவது பரணிலிருந்து வேலிக் காவலாளனிடம் அனுப்புவார். இதுவும் அவ்வாறே ஒவ்வொரு பரணில் உள்ளவராலும் எடுத்துச் செல்லப்பட்டுத் தொங்கற் பரண்வரை சென்று, மீண்டும் ஆரம்பித்த இடத்தைச் சேரும். அடுத்த யாமத்தில் "சகடை" எனப்படும் ஒரு தகரம் அனுப்பப்படும். அதையும் காவல்புரிபவர் அடித்து ஒலி எழுப்பிக்கொண்டு சென்று அடுத்த பரணிற் கொடுக்க அவ்வாறே அதுவும் தொங்கற் பரண்வரைசென்று மீளும். இவ்வாறே, காவல் புரிபவர் நான்கு சாமமும் நித்திரையின்றி இருப்பதற்காகவும், காவலிற் கருத்தூன்றி இருப்பதற்காகவும் வசதிகள் செய்யப்படும்.

யாவரும் குறிப்பிட்டபொது இடத்திற் காலை ஆறுமணிக்கு வந்து சேரவேண்டும். பின்னர் வட்டைவிதானையின் தலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NATIONAL ASSETS

LOOK BACK on the glories of
Polonnaruwa & Anuradhapura

LOOK FORWARD to Industrial progress
with local resources and
local enterprise
From paddy straw, illuk grass, bagasse,
and waste paper
comes

**HIGH QUALITY PAPER & BOARD**

Manufactured by

**THE EASTERN PAPER MILLS CORPORATION,**
**356, Union Place,**
**Colombo - 2.**

Telephone { **25325**, **25326**, **25327**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெடோனல்



## களைகளை ஒழித்து, பயிர்களைக் காத்து, வருவாயைப் பெருக்கும்

BAYER ®




ஹெடோனல் அதிசிறந்த களைகொல்லி. வயல்களில் - குறிப்பாக நெல்வயலில் - தலை தூக்கும் சகல அகன்ற இலைக் களைகளையும், சிக்கனமாக, உடனடியாக, முற்றாக, அழித்தொழிக்க வல்லது ஹெடோனல்! நெல்வயலில், விதைத்து 3 - 7 வாரத்துள் அதைப் பாவிக்க வேண்டும்.
ஹெடோனல், விளைச்சலை வெகுவாகப் பெருக்கும்.
அது இரண்டு ரகங்களிற் கிடைக்கும்.
ஹெடோனல் "எம்" - 40% எம். சீ. பீ. ஏ. கொண்டது.
ஹெடோனல் "டீ" - 55% 2.4 டீ கொண்டது.
சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - ஹெடோனல். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

உற்பத்தியாளர்:
**பேயர் லீவர்கூசன்**
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
**ஹேக்கெம் லிமிட்டெட்**
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P-9151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் கூட்டத்தில் குற்றவாளிகளின் பெயர்கள் வாசிக்கப்படும். உடனே அவர் மன்றின் நடுவில் பிரம்புடன் நிற்கும் அதிகாரியின் முன் வந்து குப்புறப்படுப்பர். உடனே அதிகாரி தம்பிரம்பைத்தோள் வரை உயர்த்தி நுனி நிலத்தில் படும்படி ஓங்கி அடிப்பர். குற்றத்திற்கேற்ற தொகையான அடிகளை வழங்குவர். இவ்வாறு நாடோறும் நடைபெறும். இதனல் யாவரும் தவருது காவலுக்குச் சென்று பயிரைக் காக்கவேண்டி நேரிடுகின்றது.

அறுவடை:—

நெற்பயிர் நன்கு விளைவெய்தியதும் சுபநாளில் அறுவடை ஆரம்பிக்கப்படும். நாலரைமுழ நீளமுடைய தடியினுல் பதினுறு கம்பு நீளமும், ஏழு கம்பு அகலமுங் கொண்ட பங்குகளாக அறுவடைப் பங்குகள் அளந்து கொடுக்கப்படும். தொழிலாளர் பலர் அவ்வவர் ஆற்றலுக்கேற்ப ஒன்ருே, இரண்டோ அல்லது அதற்கு மேற்படவோ பங்குகளைப் பெற்றுக் கதிர்களை அரிந்து "உப்பட்டி" யாக்குவர். ஒரு பங்கு வெட்டினல் ஒரு மரக்கால் நெல்லைக் கூலியாகப் பெறுவர். இவ்வாறு வெட்டப்பட்ட கதிர்கள் யாவும் "சூடுகளாக" (போர்) வைக்கப்படும். யாவர்க்கும் வசதியான சுபதினத்தில் சூடுபோட (போரடிக்க)த் தொடங்குவர்.

சூடுபோடுதல்:—

இதற்குப் பல முன் ஆயத்தங்கள் செய்யப்படும். காட்டிற் சென்று "கோலம்", 'கட்டைமிலாறு' என்னும் கருவிகளை ஆயத்தஞ்செய்வர். "பன்னல்" என்னும் செடியிலுள்ள அலம்பல்களை ஒரு முழ நீளத்தில் தறித்து அடுக்கிக் கட்டி நீண்ட தடியின் நுனியில் ஏற்றுவதே ''கோலம்'' எனப்படும். இது நென்மணிகளை ஒன்ருகக் குவிப்பதற்கு உதவும் ஆயுதமாகும். நீளமான பரந்த "நெல்வி" மிலாறு கொண்டு கட்டப்படுவதே ''கட்டைமிலாறு'' ஆகும். களத்தில் வைக்கோல் நீக்கப்பட்டபின் தூசிகளை அகற்றுவதற்கு இது உபயோகப்படும். சூடுபோடுங் காலம் முழுவதும் நெற்களம் மிக்க புனிதத்தன்மையுடன் விளங்கும்.

அரக்குப்புதைத்தல்:—

முல்லைக்காரன் சூடுபோடுவதற்கு முதல் நாளன்று கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கி, ஒரு முட்டியில் தீர்த்தம் பெற்று வருவான். முன்னமே செதுக்கிவைக்கப்பட்ட சூட்டுக் களவட்டியின் மத்தியில் அன்று பிற்பகல் அரக்குப் புதைத்தல் நடைபெறும். ஒரு சிறுபெட்டியுள் விலையுயர்ந்த பொருள்களான இரத்தினம், தங்கம், வெள்ளி, வலம்புரி இடம்புரிச்சங்குகள் வலம்புரிக்காய் முதலிய பொருள்களை அடைத்துக் களத்தின் மத்தியில் குழிதோண்டிப் புதைத்து, தோண்டப்பட்ட மண்ணினுல் ஒரு பிள்ளையார் சமைத்து நெற்கதிரால் அமைக்கப்பட்ட பீடமொன்றில் பிள்ளையாரை இருத்திப் பொங்கல் பூசைகள் செய்த பின்னரே களத்தில் சூடு தள்ளப்படும். வளைந்த கம்பாகிய ''வேலையாளனே'' இதற்கு உபயோகிக்கப்படும் ஆயுதமாகும். உழவர் யாவரும் வேலை செய்யும் பொழுது தலையில் ''மருந்துவளையம்'' எனப்படும் முடக்கொத்தான் கொடியாலாக்கப்பட்ட வளையத்தைத் தரித்துக் கொள்வர். ஆல், அரசு அத்திப்பட்டைகள், முதிரை, வேம்பு, முடக்கொத்தான், நாருகரந்தை என்பவற்றின் இலைகள் முதலியவற்றைச் சேர்த்து வைக்கோலால் முறுக்கப்பட்ட புரி ஒன்று களத்தைச் சுற்றி நிலத்திற் போடப்படும். இது ''காவற்புரி'' என அழைக்கப்படும். நெற் களத்திற் பேசும்மொழியும் வேறுபட்ட குழுக்குறியாகவேயிருக்கும். எடுத்துக் காட்டாகச் சில வருமாறு:— வீட்டைக் கூரைக்கோடு என்றும், நெல்லைப் பொலியென்றும், பாக்கைக் கருங்காய் என்றும், வண்டியை ஆடுகாலன் என்றும், மரக்காலைக் கணக்கன் என்றும் அழைப்பர். அங்கு பேசும் சகல வார்த்தைகளும் இவ்வாறே மாற்றிப் பேசப்படும். பூதங்களால் நெல்வாரிச் செல்லப்படாதிருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வழக்கம் கைக்கொள்ளப்படுகிறது.

சூடுபோடும்போது குரல்காட்டிப் பாடும் இனிய பாடல்களோ பல. அவற்றுட் சில வருமாறு:

''பொலி பொலிதாயே பொலி
தம்பிரானே பொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி பொலி பூமாதேவித்தாயே
மண்ணின்களமே மாதாவே
நிறைகளமே
பொன்னின்களமே பூமாதேவி அம்மா
பொலி பொலி பொலியோ''

''நாளது கேட்டு நார்க்கம்பு வெட்டி
நல்ல கடாக்கள் தெரிந்து பிணைத்து
ஏரது பூட்டி இடம்பட உழுது
எல்லையில்லாத செந்நெல் விதைத்துச்
சோழன் எருது தொண்ணூறாயிரம்
பாண்டியன் எருது பன்னீராயிரம்
இரவும் பகலும் ஏற்றி இழுக்கப்பொலி
பொலி பொலி பொலி யோ''

இவ்வாறு பத்துப் பதினைந்து நாட்கள் இரவும் பகலும் பயபக்தியுடன் சூடு போடும் வேலை நடைபெறும். ஒவ்வொரு நாளும் போடியாரின் சமுகத்தில் நெல் அளந்து கணக்கெடுக்கப்பட்டுப் பட்டடையில் இடப்படும். ஈற்றில் விதை நெல் சோற்றுநெல் (உழவர்க்குக் கொடுத்தபடி) மாட்டுநெல் எவ்வளவென்று கணிக்கப்படும். பின் ஐம்பது வீத வட்டியுடன் சேர்த்துப் போடியாருக்குப் போகவேண்டிய நெல் வண்டிகளில் ஏற்றப்படும். அத்துடன் விளைவில் பத்துக்கு இரண்டு, அல்லது மூன்று என்ற விகிதத்தில் காணி ஆயமும் போடிமாரால் அறவிடப்படும். கொண்டு சென்ற நெல்லை இந்த உழவர்களே போடிமார் வீட்டில் பட்டடைகளாகக் கட்டுவர். போடிமார் வீட்டுக்குப் புதிர்காவும் நாளன்று உழவருக்குச் சிறந்த விருந்துபசாரம் நடைபெறும். இதுபோல் முல்லைக்காரனும் தம் குழுவினருக்கு''முல்லைச்சோறு''கொடுக்கும் வழக்கமும் உண்டு.

இன்று விவசாயம் இயந்திரமயமாக்கப்பட்டு ஒரு தனி மனிதன் பல ஏக்கரைச் சில நாட்களில் செய்யும் வாய்ப்பு உண்டானபடியால், மேற்படி சம்பிரதாயங்கள் அவசியமற்றனவாய் விட்டன.

**வி. விசுவலிங்கம்,**
களுவாஞ்சிக்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சலை அதிகரித்து

நாட்டின் விருத்திக்கு உழைத்துவரும்

# விவசாய மன்னர்கள்.

பெரும்போகம்

1966/67, 1967/68, 1968/69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனையைச் சேர்ந்த திரு. சிதம்பரப் பிள்ளை சந்திரபாலன் என்னும் இளைஞர் 1966/67ம் ஆண்டு பெரும்போக நெற்செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 130 புசல் விளைவைப் பெற்று மட்டக் களப்பு மாவட்டத்தில் 1ம் பரிசைப் பெற்றுள்ளார். இவர் 1967/68ம் ஆண்டு பெரும்போக நெற் செய் கைப் போட்டியிலும் 138 புசல் நெல் விளைவைப் பெற்று 2ம் பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகத்தை வகிக்கும் ஒருவரின் புதல்வராயும் படித்த வாலிபரா யுமிருந்தும், விவசாயத்தில் தனது முழு நேரத்தையும் அர்ப்பணித்துள்ளதன் காரணமாக வாழைச்சேனைப் பிரிவில் மற்றும் ஏனைய விவசாயிகளுள் ஒரு முன் மாதிரியான விவசாயியாகத் திகழ்கின்றார்.

இவ் இளைஞரின் முன்மாதிரியைப் பின்பற்றி மட்டக்களப்புப் பிரிவில் படித்த இளைஞர்களும் உத்தி யோக மோகத்தைக் கைவிட்டு விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்து மட்டக்களப்பின் பொருளா தாரத்தை முன்னேற்ற வேண்டுமென்பதே இவரது பேரவா.

—✻—

கிரான் என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு. கனகசபை என்னும் பரம்பரைக் கமக்காரராகிய இவர் 1967/68ம் ஆண்டு பெரும்போக நெற் செய் கைப் போட்டியில் ஏக்கருக்கு 153 புசல் விளைவைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 1ம் பரிசைப் பெற்றுள்ளார். இவர் 1966/67ம் ஆண்டு பெரும் போக நெற்செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 116 புசல் விளைவைப்பெற்று 2ம் பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் ஆரம்பத்தில் தனக்குச் சொந்தமான 4 ஏக்கர்க் காணியில் நெற் செய்கை செய்து ஏக்க ருக்குச் சராசரியாக 25 புசல் விளைவைப் பெற்று வந்துள்ளார். இவர் 1964ம் ஆண்டு தொடக்கம் விவ சாயப் பகுதியினருடன் தொடர்புகொண்டு படிப் படியாகத் தனது நெல் விளைவைக் கூட்டிவந்துள்ளார்.

இவரது பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக அயலில் உள்ள நெற் காணிகளையும் குத்தகைக்கு எடுத்து அதிலும் விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்து இன்று மேற்படி கிராமத்தில் ஒரு பிரமுகராக விளங்கிவருகின்றார். இன்று இக்கிரா மத்திலுள்ள ப. நோ. கூ. சங்கத்தின் தலைவரும் இவரே.

விவசாய விஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமை யில் வசித்துவருவதால்தான், தான் இந்த நிலைமைக்கு வந்துள்ளதாயும் எப்போதும் தான் விவசாய இலா காவுக்கு நன்றி உள்ளவரென்றும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறக்கட்டான்சேனைக் கிராமத்தைச் சேர்ந்த படித்த வாலிபரான திரு. கே. சிவனடியான் என்பவர் அரசாங்க உத்தியோகத்தை நம்பியிராது, கஷ்டமான போக்குவரத்தையும் பொருட்படுத்தாது தரவைப் பகுதி நெற்காணியில் நெற்செய்கை செய்து, 1967/68ம் ஆண்டு நெற்செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 131 புசல் விளைவைப்பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்ரும் பரிசைப் பெற்றுள்ளார்.

இவருக்குச் சொந்தமான நெற்காணி இல்லாமல் இருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் காணி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தரவையில் ஐந்து ஏக்கர் காணி பெற்று விவசாயம் செய்துவருகின்ரூர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைப்போன்ற எல்லா வாலிபர்களும் உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து கஷ்டங்களைப் பொருட்படுத்தாது விவசாய இலாகா உத்தியோகத்தர்களின் அறிவுரைகளின்படி விவசாயம் செய்து முன்னேறவேண்டும் என்பதே இவரது பேரவாவாகும்.

—❋—

கரடியன் ஆறு என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு. கே சின்னத்தம்பி என்னும் பரம்பரைக் கமக்காரராகிய இவர் 1968/69ம் ஆண்டு பெரும்போக நெற் செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 229 புசல் விளைவைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 1ம் பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் ஆரம்பத்தில் 1947ம் ஆண்டு கரடியனுறு குடியேற்றத் திட்டத்தில் 5 ஏக்கர் நெற் செய்கைக் காணியும் 3 ஏக்கர் மேட்டு நிலக் காணியும் பெற்று நெற்செய்கையும் மேட்டு நிலப் பயிரும் செய்து வந்துள்ளார். பின் 1962ம் ஆண்டிலிருந்து விவசாய இலாகாவுடன் தொடர்புகொண்டு அவர்களின் அறிவுரைகளைக் கையாண்டு திருந்திய நெல் சாகுபடி செய்து படிப்படியாக விளைவைக் கூட்டிவந்துள்ளார்.

இவரது பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாகவும், விடாமுயற்சியின் காரணமாகவும் அயலிலுள்ள நெற்காணிகளை குத்தகைக்கு எடுத்து ஏறக்குறைய 80 ஏக்கர் விஸ்தீரணத்தில் விஞ்ஞான ரீதியில் வேளாண்மை செய்து தற்போது 3 உழவு இயந்திரங்களும், 1 காரும், 2 பவர் ஸ்பிரேயர்களும் தனது சொந்தத்தில் வாங்கியுள்ளார். மேலும் திருந்திய முறைகளைக் கையாண்டு கூடிய விளைவைப் பெறுவதே இவரது குறிக்கோளாகும்.



—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—★—



கரடியனாறு என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி நவரத்தினம் என்பவர் ஏறக்குறைய 4 ஆண்டு காலமாக விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்து 1968/69ம் ஆண்டு பெரும் போக நெற்செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 184 புசல் விளைவைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 2ம் பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் ஆரம்பத்தில் தனது தகப்பனாராகிய திரு. சின்னத்தம்பி அவர்களோடு கூட்டு வேளாண்மை செய்து பின்பு தனது விடாமுயற்சியால் 1967/68ம் ஆண்டு, பெரும்போகத்தில் தனித்து நெற்காணி குத்தகைக்கு எடுத்து தனது சொந்தச் செலவில் ஏறக்குறைய 10 ஏக்கர் வேளாண்மையை விவசாயப் பகுதியினரின் ஆலோசனைப்படி விவசாயம் செய்து வருகிறார்.

1969/70ம் ஆண்டு பெரும்போகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நெற்செய்கைப் போட்டியில் 1ம் பரிசைத் தட்டிக்கொள்வதே இவரது முக்கிய எண்ணமாகும்.

செங்கலடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏ. சினித்தம்பி அவர்கள் 1968/69ம் ஆண்டு பெரும் போக நெற்செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 172 புசலைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றும் பரிசைப் பெற்றுள்ளார்.

—★—



இவரது குடும்பம் பரம்பரை விவசாயிகளாகும். விவசாயப் பகுதியாரின் திருந்திய முறைகளை இவர் அறியாமல் இருந்த காலங்களில் தமது நெற்செய்கையில் சராசரி ஏக்கர் விளைவாக 30 புசல்களை பெற்று வந்துள்ளார்.

பின்னர் 1960ம் ஆண்டு தொடக்கம் விவசாயப் பகுதியார் சிபார்சு செய்யும் திருந்திய முறைகளைக் கையாண்டு படிப்படியாக முன்னேறியுள்ளார். இவர் பொருளாதார முன்னேற்றம் அடைந்தபடியால் 1967ம் ஆண்டில் ஓர் புதிய உழவு இயந்திரத்தை வாங்கக்கூடியதாக இருந்தது. எல்லாத் திருந்திய முறைகளையும் சரிவரச் செய்தமையால் 1968/69ம் ஆண்டு பெரும்போகத்தில் மேற்படி இடத்தை அடைந்துள்ளார்.

இவருடைய நோக்கம் 1969/70ம் ஆண்டு பெரும்போக நெற்செய்கையில் இம்மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறுவதே!

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LET LISTER

## DIESEL ENGINES POWER YOUR PROJECTS

Lister air cooled and water cooled diesel engines can now be obtained under the Government's liberalised policy of imports on Open General Licence. For best results in your own projects make use of the most reliable Diesel Engine in the world.

* World Wide reputation for robustness and long life.
* Immediately adaptable for a wide range of applications Water Pumps, Generating Sets, Power for Rice Mills, Coir and D/C Mills, Stone Crushers, Rubber Mills etc., etc.
* Spare parts readily available.

### AIR COOLED TYPE

Better efficiency, economy and power/weight ratio-cheaper than water-cooled and less parts to wear.

| TYPE | HORSEPOWER |
|---|---|
| LR 1 | 5.25 |
| LR 2 | 10.5 |
| SR 1 | 7.75 |
| SR 2 | 15.5 |
| SR 3 | 23.25 |
| SR 4 | 31.0 |
| VA | 7.5 |
| HA/HB/HR 2 | 22/26/29.5 |
| HA/HB/HR 3 | 33/39/44 |
| HA/HB/HR 4 | 44/52/59 |
| HA/HB/HR 6 | 66/78/88.5 |
| HS6/HRS6 | 90/102 |



HS6 MODEL

### WATER COOLED TYPE

Tested and tried in the most severe conditions in Ceylon. Still the most popular and reliable diesel engines in the island.

| TYPE | HORSEPOWER |
|---|---|
| 6/1 | 6 |
| 8/1 | 8 |
| 12/2 | 12 |
| 16/2 | 16 |
| HW 2 | 22 |
| HW 3 | 33 |
| HW 4 | 48 |
| HW 6 | 72 |
| HWS 6 | 90 |
| JP/JS 3 | 35/43.5 |
| JP/JK 4 | 46/62 |
| JP/JK 6 | 70/90 |
| TS 3 | 125 |



HW6 MODEL

## HLE HARRISONS LISTER ENGINEERING LTD.

45, MORGAN ROAD, COLOMBO 2. TEL: 31744/6 GRAMS: "HARRILIST".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# At Rs. 15,275/-
# Available ex-stock.
# B.M.C. Mini Tractor
# Cheapest light 4 wheeled

BRITISH LEYLAND

**BMC**

## Agricultural Tractor with all the big features of the higher horse-powered tractors.
## Implements to match



Islandwide after sales service facilities and spares readily available

Particulars from Sole Distributors

Agricultural Division, **COLLETTES LTD.**

101, D. S. Senanayake Mawatha, Colombo 8.
Phone: 96101 - 5 (5 lines) and 93401/2

0414

Perch (S: 'Modha'; T: 'Koduva'); Breams including the Silver or Black Bream (E: 'Brown Triple-tail'; S. 'Oleya'; T: 'Karu-mural'); one or two species of Ambassis (E: 'Glass-Fish' or the 'Glassy Perchlet'); — a translucent: fisb, which was shown me to satisfy my curiosity); Cat-Fish (S 'Gal-Angulava'; T: 'Keluthy' or Keleru'); Siganids (E: 'Surgeon Fish'; S: 'Orava'; T: 'Ora'); Grey Mullets (S: 'Godaya';- T: 'Manalai') in passing shoals; Pearl Spots (S: 'Koraliya'; T: 'Sethel') "Gobeyas", Govies; and Blennies.

And deeper down, he found Red Snappers (S: 'Thambalaya'; T 'Adallu':) on masses of rocks, and there were also (as we ourselves saw just below the surface of the boat) numerous large, white, gleaming Jelly-fishes (which did not sing, but for which Jonklaas had a pet aversion, as contact with them irritated his skin). He pointed out, to our great surprise, that though at several points we in the boat could not hear the music, he was able to hear them "down under" in varying degrees of intensity — that is to say, the deeper he dived, the louder became the " Croaks ", due perhaps, he thought, to the acoustical properties of salt water. And, right at the bottom, he stated that, curiously enough, there was no music at all. This statement alone, apart from his other arguments, seemed to shatter the theory, which I and others previously held, that the singers were shells, simply because, on previous occasions, we heard the strains only at definite spots or at particular times at the surface, from the boat.

Apart from the "croaks" (the low bass notes heard towards the end of the vibrations, and which were often ridiculously attributed to frogs which did not inhabit salt water), the other musical notes, Jonklaas said, were not heard at the bottom which was composed of ooze and so devoid of much fish life, not even molluscs. But these latter sounds were heard (according to him) "well above the bottom", though not on the surface, or where there were no strong currents.

Our spearman also discovered that the musical notes were distinct from "croaks". The former he described as "single notes of rather medium pitch coming as from a harp, or from the plucking of violin strings when tuning". He compared them also to "the sounds produced when a fairly long pin, held firmly at various lengths between the front teeth, was plucked at intervals". In regard to the audible, sharp, well-defined sounds, however, he was of opinion that they could emanate only from fishes. To clear my doubt, he called my attention to the fact that, in the film "Voices of the Deep", he was able to hear that certain fishes of Chesapeake Bay in the U. S. A. made similar sounds. And some of our own fishes (like the Black Bream-Tamil: 'Karu-mural'), as I know, uttered noises, too, when taken out of the water, let alone the sounds they produced under it.

While summing up his conclusions, Jonklaas was of opinion that the "croaks" were uttered by one kind of fish or more, for example, the Cat-Fish, or the Silver Bream or the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tiger-Fish or Crescent-Fish; S: 'Gonga' or 'Iri-Bateya'; T: 'Palinkichaan'; — all found deep at or near the lagoon bottom.

The other (more pleasant) sounds, he thought, were produced by the nocturnal Glass-fishes (Ambassis), which were in evidence at the level at which he heard them

"The final verdict, however, cannot be given without further investigations", he remarked. "Mine is only a conjecture based on a preliminary first-hand research, and the problem can probably be solved much nearer, if each of the species I have listed — and also other fishes — can be reared under simlar conditions, say, in separate aquariums".

He added that the sounds should be carefully recorded with very sensitive instruments in order to trace the type of sounds heard in the lagoon. For this purpose, he owned that he was not competent enough, and that a more experienced person, like an expert icthyologist, should take up the matter from where he had left, for more intensive research, in order to arrive at a correct solution, after a gradual process of elimination, of this controversial and fascinating mystery.

We are thankful to Jonklaas for helping us thus far, but then, who will come?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையதும் புதியதும்

"மஹாகவி"

1. ஆண்டுகள் ஏழோ ஆறின் பின்னர்
மட்டக்களப்பை மறுபடி பார்க்கிறேன்.
இன்றும் அரிய பழமைகள் காண்கிறேன்.
குக் கிரா மத்துக் கோயில் ஒன்றிலே
நிகழ்வதாய்க் கேட்டு நெடுந்தொலை நடந்து, நான்
அன்று கண்டதோர் அருங்கலை விருந்தே!
இன்றும், இவ் விரவு பட்டினத் துறையிலே
போர்த்திக் கொண்டுநான் துயிலப் போகையில்,
காற்சலங்கையின்ஒலி கணீர்எனக் கேட்டது.
வாத்திய இசைகளும் எழுந்து வந்தன.
கூத்துப் பயில்வோர் குரல்கள் தொடர்ந்தன.
புதியவர் கையிலே புடம் பெற் றினிய
அதிர்வுகள் நெஞ்சினில் அதிர
எழுகிற பழைமைகண் டுளமகிழ்ந் தேனே.

2. மட்டக் களப்பில் மறுபடி அந்தக்
கோட்டையைக் கண்டு கொண்டு நடக்கிறேன்.
ஆட்டை வழியினின் றப்பால் விலக்கி,
வாயிலுள் நுழைந்து மாடியில் ஏறினேன்.
கல்லடிப் பாலமும் காட்சி தந்தது.
கோடும் அருகில் ஓர் கோயிலும் தெரிந்தன.
புதியவர் இன்னும் ஆட்சி புரிகிற
பழையவை இவைகள். பக்க மதிலிலே
ஊர்ந்து செல்கிற தொரு சிறு வெடிப்பு!
வெடிப்பினைக் கண்டு துடித்துப் போகிறேன்.
படிப்படி யாகப் பழையன விழுந்தால் !....
நகரவை முன்றிலில் இளையவர் நாட்டும்
வெளி அரங் கினில் விழி படவும்
எழுகிற புதுமை கண் டுளமகிழ்ந் தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Floods of December 1969

The rains began on the 22nd of December after two years of scorching drought. There were minor floods in December 1967, but the North East monsoon dried up early that season, and during almost the whole of 1968 and 1969, till Christmas time, Batticaloa was under a long hot dry spell. The heat and drought had combined to sap the soil of moisture and virtually destroy most of the coconut plantations in the District. For three seasons in succession, the paddy fields in several areas were deprived of much-needed water. This time too it looked as though the monsoon would fail.

The persistent rain which started on the 22nd of December gave a clear indication that this spell of drought was over, and that the flood was in the offing. It continued to rain hard on the 23rd and the 24th, and harder still on Christmas day. The 2.85″ of rain which drenched Batticaloa on Christmas day, was accompanied by a gale going up to 45 miles per hour shortly before noon. The rains eased off slightly on the 26th but came back with a vengeance on the 27th when Batticaloa recorded 5.37″ of rain. The rain beat down with a gale touching 55 miles per hour at 8.30 p.m. By this time, the lagoon had risen ominously and was threatening to inundate large stretches of land on both sides. That night, and the next day, heavy rains continued incessantly, and the level of water in the lagoon near the Koddaimunai bridge rose to 4′ above sea level. The two breaches made earlier in the Batticaloa Sand Bar off Kallady, proved to be ineffective. An incision was made in the Sand Bar, 200′ long, 8′ deep, at the crest, and 4′ wide, on the night of the 27th, by manuel labour in the midst of strong winds and heavy rain. Water spurted out of the lagoon and into the ocean at great speed. The racing waters ate into the Sand Bar on both sides and the breach widened rapidly. Within 24 hours the breach had widened to about 300′, and the speed of the flow had not diminised, but the lagoon continued to swell. Enormous quantities of water trapped in the 1200 sq miles catchment area of the lagoon and spilling from numerous tanks, continued to rush into the lagoon faster than the lagoon could empty its burden into the sea. The rains continued unabated, and the next day, the lagoon had risen to nearly 5′ above sea level in spite of the tremendous rate of discharge into the sea through the breach at the Sand Bar which had widened to over a quarter of a mile. The rains per-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sisted, flood waters rushed into and out of the lagoon, and the breach at the Sand Bar continued to widen. The level of water in the lagoon near the Koddaimunai bridge, remained at nearly 5′ above sea level for half a day before the rate of outflow to the sea was able to overtake the rate of inflow to the lagoon.

In the meantime practically all the villages in Batticaloa were under water. Batticaloa city was flooded, Weber stadium and the adjoining grounds were deep under water, and gave the appearance of a lake. Many houses had collapsed and thousands of homes had become uninhabitable. Most roads were impassable. The ferries were not functioning. The bus service had dwindled to almost nil, and the telecommunication service was severely disrupted. Almost all normal communications between one area and another were cut off. The whole of Manmunai west Division and much of Manmunai South and Eruvil Porativu, Eravur Pattu and Koralai Pattu Divisions could not be reached at all. Refugee camps sprung up wherever there were permanent buildings on high ground, mostly in school buildings. In some areas, even this was not possible as such buildings were not available, and the condition of the roads did not permit evacuation to other areas. An urgent message was sent to the Ministry of Education, and the opening of schools was put off from the 2nd of January to the 8th of January,

Food supplies could not be sent to Eravur and Valaichenai by road. Fortunately, the rail service which had been disrupted by a derailment between Polonnaruwa and Hinguragoda, resumed on the 30th. Plenty of rice was available, but stocks of flour, sugar and and some other essential commodities were running dangerously low. A special goods train, loaded with flour and sugar, was quickly sent by the Food Commissioner to deliver these commodities at Valaichenai, Eravur and Batticaloa For several days, Eravur and Valaichenai could only be reached by rail. Supplies were despatched to Kaluwanchikudy by road from Batticaloa. Some areas were supplied with essential commodities by boat. Some of the boats were privately owned and two were provided and operated by the Army Unit stationed at Amparai. A few villages like Irunooruvil, Pavatkodichenai, Perillaveli and Kallichchai could not be reached even by boat, and urgent radio messages were sent to Colombo for food parcels to be air-dropped. Mr John Perera, Asst. Director of Social Services, and Mr. T. M. Hannan of the C B C. flew in by a special plane to Batticaloa to study the situation at first hand and report back. The available stocks of flour and sugar were quickly exhausted, and urgent messages were sent for new stocks. Alarming reports received, that Unnichchai and Welighakandiya tanks had breached, were promptly investigated and found to be false.

On the 30th and 31st, the swell of the lagoon was slowly subsiding. At the turn of the decade, the lagoon level was down to 2½″ above sea level, but



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the greter part of the District was yet immersed in water. New Year's day saw the water draining out fast into the lagoon from the flooded area, in spite of continued rains. By the 3rd, the rains had tapered off, and the coastal areas had almost returned to normal, although much of the interior was still flooded. Many previously marooned villages, became approachable by road. Almost all the flood - stricken people had received their free rations of rice, flour, sugar, tea, dhal and coriander within three or four days of the disaster. Stocks of flour and sugar in shops were limited, and this affected the middle class, but the poorer sections of the population were not in want as they were issued with generous dry rations. With the arrival of more consignments of flour and sugar, the scarcities eased.

A late - night telephone call from American Ambassdor Corry to the Government Agent set in motion the issue of CARE biscuits to flood striken children. Dr. Kingsley Seevaratnam, Chief Planning Officer of the International Red Cross in Geneva and a fellow-officer, Mr. Pierro Burtin flew to Batticaloa in a special plane for an on-the-spot assessment of the urgent needs of the area. More roads became passable. The numbers in the refugee Camps dwindled, as more and more families went back to their homes, or what was left of them. Confirmatiom was received in respect of the tragic death of 8 persons (in different villages) as a result of the floods. A second issue of free rations commenced. A sub-committee of the D.C.C. was urgently summoned on the 3rd of January to make a rough assessment of the damage and the relief measures already undertaken, to determine the course of further action.

On the morning of the 4th of January, the Hon'ble Prime Minister and the Hon'ble Minister of Agriculture and food, arrived by air, and met officials and members of Parliament at the Kachcheri. Immediately after the meeting, the Hon'ble Prime Minister and the Government Agent went on an aerial survey of Batticaloa. Much of the District was still under water, but it was clear that the floods had considerably subsided. The major tanks were seen to be spilling but intact, and the breach in the Sand Bar appeared to be over half a mile broad. Very little damage to crops was indicated. There was no rain on that day.

By this time, aid despatched by the Ceylon Red Cross Chairman, Mr. A D. Samaranayake, had started to come in. Clothes, food stuffs and other items brought by the Red Cross personnel, were distributed in the villages all over the District. Offers of help came from the Rotary Club of Batticaloa and the Batticaloa Youth Service League. The members of the Senate, as a body, under the leadership of Senator the Hon'b'e A.Ratnayake, gave substantial assistance to three or four selected villages in Koralai Pattu and Eravur Pattu divisions. Professor C.C. de Silva and a band of Soukyadhana Volunteers gave assistance to some of the areas in Manmunai West Divisions. A young team of helpers from the Trincomalee Yonth Service League gave assistance to some of the villages in the M. S. & E. P. division. Help was also received from the Survey Department Hindu Association



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Colombo Young Women's Hindu Association, the Jaffna Diocese of the Church of South India, the Colombo Diocese of the Church of Ceylon, the Rotary Club of Kandy, and other organisations and individuals. Among those who offered large scale assistance for rehabilitation projects, are the Methodist and Roman Catholic Churches, and the Rotary Clubs of Colombo and Colombo North.

The Health Department machinery rolled into action to prevent and control the diseases that follow in the wake of floods. Estimates of damage to crops, irrigation works, houses, roads, telecommunications, equipment etc. were prepared by the respective departments with a view to repairing the damage. Very urgent items of work were attended to immediately, some on Shramadhana. Plans were prepared for Housing Schemes to rehabilitate some of the flood affected families.

By Thai Pongal day, the immediate problem of flood relief was almost disposed of, and the task of rehabilitation had begun.

**D. Nesiah**
**Govt. Agent, Batticaloa District.**

**The Kachcheri,**
**Batticaloa, January 18, 1970.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிலமென்னும் நல்லாள் நகும்"

நிலவளமும், நீர்வளமும் நிறைந்துள்ள ஈழநாடானது, பண்டைக் காலத்திலிருந்தே நெற்செய்கையில் ஈடுபட்டு வந்திருக்கிறது.

"...........................................................
நீரின்றயமையா யாக்கைக்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்
கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே"

எனச் சங்கப் புலவர் குடபுலவியனார் சுட்டிக் காட்டியமைக்கமைய ஈழத்தின் பண்டைய அரசர்கள் அமைத்த குளங்களும், வெட்டிய வாய்க்கால்களும், கட்டிய அணைக் கட்டுகளும் இதற்குச் சான்று தருவனவாய் இன்றும் காணப்படுகின்றன.

இவ்வாறு சிறந்த முறையில் நெற்செய்கையானது உயர்வடைந்து விளங்கியமையாலேயே, எமது நாடானது தனது உணவுப் பண்டங்களை, வெளிநாட்டுக்கும் ஏற்றுமதி செய்திடக்கூடிய நிலையினைப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டில், காவிரிப்பூம் பட்டினம் என்னும் வணிக நிலையத்திலே, பல இடங்களிலுமிருந்து விற்பனை செய்யப்படுவதற்கெனக் கொண்டுவரப்பட்ட பலவகையான பண்டங்களையிட்டுக்கூறும் பட்டினப் பாலை என்னும் சங்க இலக்கிய நூலானது,

"...........................................................
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி"

எனக் குறிப்பிடும் அடிகள், ஈழமானது உணவுப் பொருளை அங்கு ஏற்றுமதி செய்த உண்மையினை எடுத்துக் காட்டுகிறது.

பண்டைய உயர் நிலையானது இடைக்காலத்திலே பல்வேறு காரணிகளால் தாழ்ந்திட, நமது நெற்செய்கையும் நலிவடையலாயிற்று. உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்த நிலைமாறி, உணவுப் பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்திடும் இழிநிலை ஏற்பட்டது.

அந்நியர் ஆட்சி அகற்றப்பட்டு, நாடு அரசியல் விடுதலை பெற்றதைத் தொடர்ந்து, உணவு விடயத்திலும் விடுதலை பெறவேண்டுமென்னும் துடிப்பு எமது மக்களிடத்திலும், அரசினரிடத்திலும் குறிப்பிடத்தக்க அளவு ஏற்படலாயிற்று.

பயிர்ச்செய்கைக்குள் கொண்டு வரப்பட்டுள்ள 38 இலட்சத்து 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் ஏக்கர் நிலத்திலே, ஏறத் தாழ 16 இலட்சம் ஏக்கரில் நெற் செய்கை மட்டுமே நடைபெறுவதானது, இத்தொழிலில் அரசினரும் மக்களும் காட்டிடும் ஆர்வத்தை விளக்குவதாக உள்ளது.

ஈழத்தின் ஈரவலயமானது, பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்கே பெரிதும் பொருத்தமாய் அமைந்துள்ளமையால், உலர் வலயமே நெற் செய்கையில் அதிகம் பயன் படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. ஏறத்தாழ 10 வருடங்களின் முன்னர் நெல் விளையும் மொத்த ஏக்கர் நிலத்தில் 50 வீதத்திற்கும் குறைவாகக் கொண்டிருந்தது, தற்போது 60 வீதத்திற்கும் கூடுதலான வயல் நிலத்தைக் கொண்டிருப்பது மேலே சுட்டிய நிலையினை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பண்டைக்காலத்தில் ஈழத்தின் நெற் களஞ்சியமாக விளங்கிய உலர் வலயமே, நமது வருங்காலப் பொருளாதாரச் சுபீட்சத்திற்கும், உணவின் தன் நிறைவுக்கும் திறவுகோலாக அமைந்துள்ளதென்னும் கூற்று மிகப் பொருந்துவதேயாம்.

உலர் வலயத்தின் நெல் உற்பத்தியிலே மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை என்னும் மூன்று மாவட்டங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சிறப்பாக நோக்கும்போது, இம் மாவட்டத்திலே பெரும்போக நெற் செய்கை 70266 ஏக்கர் நிலத்திலும், சிறு போக நெற்செய்கை 20288 ஏக்கர் நிலத்திலும் நடைபெறுவதைக் காணலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே 3 பிரதான நீர்ப்பாய்ச்சற் திட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் உன்னிச்சைத் திட்டமானது 15,000 ஏக்கர் நிலத்திற்கும், வாகனேரித் திட்டமானது 7,300 ஏககர் நிலத்திற்கும், மணற்பிட்டி ஆற்றுத் திட்டமானது 6,823 ஏக்கர் நிலத்திற்கும் நீர்ப்பாய்ச்சல் வசதியினை அளித்துள்ளது.

இம்மாவட்டத்தின் பெரும் போக நெற் செய்கையில் ஓர் ஏக்கருக்குச் சராசரி 40 புசல் நெல்லும் சிறுபோகச் செய்கையில் சராசரி 37 புசல் நெல்லும் பெறப்படுகிறது. மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது விளைச்சல் குறைவாகவே காணப்படுகிறது. பெரும்போகச் செய்கையிலே நுவரெலியா மாவட்டமானது 1963,64ல் ஓர் ஏக்கருக்கு 58—67 புசல் விளைவினைக் கொடுத்தது. சிறுபோகச் செய்கையில் வதுளை மாவட்டம் 1964ல் ஓர் ஏக்கருக்கு 51—57 புசல் விளைவினைக் கொடுத்தது.

ஈழத்தின் சராசரி உற்பத்தி விகிதமும் வருடத்துக்கு வருடம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1952ல் ஏக்கருக்குச் சராசரி 30 புசலாக இருந்த உற்பத்தியானது, தற்போது 50 புசலுக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. உற்பத்தி விகித அளவு கூடி உள்ள போதிலும், இத்தாலி, அவுஸ்திரேலியா, யப்பான், முதலிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது உற்பத்தி குறைவாகவே காணப்படுகிறது. இத்தாலியில் ஏக்கருக்கு 104 புசலுக்குக் கூடுதலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அவுஸ்திரேலியாவில் 95 புசலுக்குக் கூடுதலாகவும் யப்பானில் 75 புசலுக்குக் கூடுதலாகவும் பெறப்படுகிறது.

மட்டக்களப்பு உட்பட ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஏக்கர் உற்பத்தியை அதிகரித்திடச் செய்வதில் தற்போது கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. நவீன முறைகளும், புதுவகை நெல் இனங்களும் பயன்படுத்தப்படுகின்றன. பொது மக்களை ஊக்குவித்திட அரசினர் காட்டும் உற்சாகம், நெல்விளைச்சலை அதிகரிக்கச் செய்திடப் பெரிதும் உதவுகிறது.

நாளொன்றுக்கு 700 ஆகவும், வருடமொன்றுக்கு 2,60,000 ஆகவும் அதிகரித்துவரும் குடித்தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தியாக்குவதற்குரிய முயற்சிகள் யாவும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. சகல தேவைகளையும் நிறைவுறச் செய்யவல்ல ''கற்பகத் தருவாகவும்'' ''காமதேனுவாகவும்'' நமக்கிருக்கும் ஒரேயொரு செல்வம் நிலமேயாகும். நமது முயற்சிக்குத் தக்க பலனைத்தர நிலம் எப்போதும் ஆயத்தமாகவும், மகிழ்ச்சியுடனுமிருக்கிறது. முயற்சி இன்றிச் சோம்பற் குணத்தாற் பீடிக்கப்பட்டு ஊக்கமின்றி, அறிவற்று வாழும் மக்களைக்கண்டால் நிலத்திற்கு துக்கம் ஏற்படுமெனவும், அதனால் துக்கச் சிரிப்பு சிரிக்குமெனவும் வள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார். நிலத்தின் அழுகையே, வேதனை தாங்கமுடியாத நிலையில் வரும் சிரிப்பாகும்.

> ''நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
> நிலைகெட்ட மனிதரை
> நினைந்துவிட்டல்'' என்று

பாரதியார் தொட்டுக்காட்டும் வேதனையினாலேயே நிலம் சிரிக்கின்றதென்று தோன்றுகிறது. ''நான் இருக்க உனக்கேன் தயக்கம்? உனக்கேன் மயக்கம்?'' என நிலம் கேட்பதாக வள்ளுவர் காட்டுகிருர்.

> ''இலமென்று அசைஇ இருப்பாரைக்
> காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்,''

இக்குறளானது நிலத்தின் உயர் நிலையை, உயிர்நிலையை மிகமிகத் தெளிவாகக் காட்டுவதாக அமைந்துள்ளது. பாடுபடுபவனுக்கு நிலமானது தங்கச் சுரங்கமாக மாறிவிடுமென்னும் உட்பொருள் இதனில் அடங்கி இருக்கக் காண்கிறோம்.

நிலத்தை நம்பி அயராது பாடுபட்டால் உண்மையிலே நமது ஈழவள நாடானது, உணவு உற்பத்தியில் தன்னிறைவினை விரைவில் அடைந்துவிடுமென உறுதியாக நம்பலாம். நிலத்தினை உரியமுறையில், உரியவகையில் பயன்கொண்டு பசி, பிணி போக்கி வாழ்வாங்கு வாழ்வோமாக.

**க. செபரெத்தினம்.**

# ஏன் 'கிராமக்சோன்' பாவிப்பு முறையை பின்பற்றி வரும் கால போகத்தில் பெரும் விளைச்சலைப் பெறக்கூடாது?




★ முதல் மழையுடன் தொடங்கலாம் ★ இலகுவாக நிலத்தைப் பண்படுத்தலாம் ★ ஒரே முறையில் நிலத்தைப பண்படுத்தலாம் ★ பத்து நாட்களில் விதை விதைக்கலாம ★ களைகள் இல்லாத பயிர் ★ மண்வெட்டியினலோ, ஏராலோ அல்லது உழவு இயந்திரத்தினலோ பண்படுத்தப்படும நிலத்திலும் பார்க்க இருமடங்கு நிலம் பண்படுத்தலாம் ★ உங்கள் நேரம், பணம், கூலி சேமிக்கப்படும்

CIC

''கிராமக்சோன்'' ஒரு சாதாரண களை கொல்லிமட்டும் அல்ல தற்காலத்தில் நெற்பயிர் விளைச்சலில் பாவிக்கப்படும் முறையான ஓர் இரசாயன உழவு.

மேலும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக

**கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட**

தபால் பெட்டி இலக்கம் 352, கொழும்பு.

GPL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INSURANCE CORPORATION OF CEYLON

OFFERS YOU:

★ A Full Scale Insurance Service both Life and General.

★ A National Pension Policy.

★ Direct aid to Housing.

★ Rs. 248.7 million has been invested in National Development Projects.

**Insurance Corporation of Ceylon**

288, Union Place,

**Colombo - 2.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LANKA BAKERY & HOTEL

AT

## Batticaloa & Eravur.

—★—

### BAKERY SERVICE

"Well earned name for very delicious wedding cakes, Christmas Cakes, Birthday Cakes and all sorts of palatable sweets at moderate prices. Our prompt delivery guaranteed. Place your order with us please.

—★—

### HOTEL SERVICE

We serve on you with most tasty dishes. Every variety of foods available. Choose your own choice. Famous hotel for reasonable rates. Rooms available for boarders at Eravur Hotel.

—★—

### TRANSPORT SERVICE

Being Government Contractors and Transport Agents prepared to undertake any type of transport work at most reasonable rates. Satisfaction guaranteed. Vehicles fully insured. Your orders timely executed."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For well over half a century the unvarying high quality and value of Lever products has been available to the Ceylon Housewife. This quality is the result of unceasing and progressive vigilance over standards; the subjection of all products to the most rigorous tests. From raw materials to finished products. Scientists and Technician, Manager and Worker look to nothing but the best and so pass on to the housewife the benefit of their knowledge and their experience.

But in the context of our own concern for National development, another aspect of the story needs to be told. Because of our preference for using National resources whether it be raw material or man power and the maximum use to which these are put, a Lever product means a CEYLON PRODUCT. It is not only quality a housewife is assured of. When she buys, she buys – CEYLON.

**LEVER BROTHERS (CEYLON) LIMITED.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Milk Production in the Batticaloa District

When the Milk Board was established in 1954 by an Act of Parliament, the stated aims, as defined in the Act, were, "to establish and maintain efficient and cheap milk production and marketing services in order to ensure that an adequate supply of milk of good quality is available to the consumers of milk in Ceylon at reasonable prices."

Bearing these enunciated aims in mind and also the urgent necessity to create "milk consciousness" amongst the people - average consumption being 2 ozs per day per person - the Board set about not only to collect, process and sell but also to help produce the milk necessary to make this country self-sufficient in this very essential source of high protein food. During the initial years of operation of the Board, the daily intake of milk was 6 - 120,000 pts a day. Today the daily intake of milk is in the region of 120,000 pts per day. However, with the completion of the sterilised Milk Plant at Pallekelle, the condensery at Polonnaruwa, and the Spray dried Milk Powder Plant at Ambewela, the daily minimum requirement of the Board's factories will be 480,000 pts per day, in 1970.

It cannot be denied that this guaranteed market itself will form the biggest incentive for milk production in the Island. The Board has divided the Island into four areas to service the major projects in each of these areas, and to facilitate development.

1. Coconut triangle
   Milk processing Factory, Colombo.
2. Tea triangle
   Powdered Milk Project, Ambewela;
   Sterilised Milk Plant, Pallekelle.
3. Tea cum coconut area of Southern Province
   Galle and its suburbs.
4. North Central, Eastern and Northern Provinces
   Condensed Milk Factory at Polonnaruwa.

The zonal differentiation was motivated by the need for the efficient utilisation of the sources of milk production and to carry out intensive dairy development. For instance, the daily requirement of the condensery is 120,000 pints of milk. It is evident that a major portion of this requirement has to be met by the Tamankaduwa, Batticaloa and Amparai Districts where a large percentage of the National Herd is resident. The 1968 census of livestock reveals the potential that is present in the Batticaloa and Amparai Districts.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | NEAT CATTLE | | | | BUFFALOES | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| District | Milch Cows | Dry Cows | Bulls | Calves | Milch Cows | Dry Cows | Bulls | Calves |
| Batticaloa | 10258 | 17126 | 11310 | 11567 | 6287 | 8854 | 4262 | 4890 |
| Amparai | 11812 | 19608 | 10762 | 13230 | 10732 | 14596 | 10998 | 9943 |

However, till the advent of the Milk Board into this area, dairying, though traditional, had not proved to be an economic undertaking. The owners of cattle did not consider it worth their while to take an interest in dairy farming. The number of cattle owned, merely added to their prestige. The local "Podiyars" literally own over a hundred head of cattle each. The payment to herdsmen was the milk and a certain number of calves each year. The milk was either turned into ghee or sold to 'mudalalis' who made curd and made fabulous profits by the sale of this product in towns and cities. The income earned by the herdsmen was barely enough to eke out an existence.

In this state of affairs, the quality of our National Herd deteriorated owing to indiscriminate breeding. The problems that beset the Herd and its owners became acute when the pressure on land was felt with increasing human population. Large colonisation schemes have made inroads into the free grazing lands that were available. These conditions necessitate a reorientation in the thinking of the owners of the cattle and a change in the manner of management. It is urgent that the primitive type of management that prevails even now, be eradicated and more scientific and intensive methods of management be introduced.

The National Milk Board and the Department of Agriculture have taken stock of this situation and have today launched a vigorous programme of dairy development in this area. The Department of Agriculture attacks these problems on various fronts, such as;

1. Recommending the breed for the zone.
2. Supply of superior male stock for cross breeding.
3. Provision of artificial insemination service.
4. Supply of planting material and Technical advice in the establishment of grasses.
5. Provision of curative service through the Veterinary Surgeons.
6. Selection of land for livestock projects.
7. Testing of herds for contagious diseases and immunization against them.

The National Milk Board raised the price of milk by 10 cts. in 1967, following a Cabinet decision in order to make dairying an economic and profitable undertaking. This provided the necessary stimulus to organised and intensive dairy development and it is hoped that it would prove so, also in this area. It must be stated that the market price of milk in this



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

area is the lowest in the Island. The rates at which the Board purchases milk all over the island are as follows:-

| Fat % | Revised Price | Fat % | Revised Price |
|---|---|---|---|
| 3.0 | Cts. 27½ | 3.8 | Cts. 38 |
| 3.1 | 29 | 3.9 | 39 |
| 3.2 | 30½ | 4.0 | 40 |
| 3.3 | 32 | 4.1 | 41 |
| 3.4 | 33½ | 4.2 | 42 |
| 3.5 | 35 | 4.3 | 43 |
| 3.6 | 36 | 4.4 | 44 |
| 3.7 | 37 | 4.5 and over | 45 |

Buffalo milk of over 6.0 % fat is also paid 45 cts. per pint.

There are also other special advantages that accrue to the registered supplier of the Board. To emunerate a few;

1. He obtains a cattle food subsidy of Rs. 2.10 for every 225 pints of milk supplied per cwt of Milkmax.

2. He becomes the recipient of the tax concessions.

   *a.* If his animal husbandry project derives no income for that year, the deductions and rebates allowed on that project can be set off against his other sources of income.

   *b.* All expenses incurred in his project can be deducted from income derived from the project.

   *c.* He is allowed lump sum depreciation and development rebate on capital investment made on his project.

   *d.* If the project is on crown land given out specifically for animal husbandry, he can claim a five year tax holiday.

3. The Board has arranged for loans to be given under various schemes to milk producers for the purpose of dairy development through the Ceylon State Mortgage Bank and the People's Bank.

4. An Insurance Scheme for cattle has also been finalised with the Insurance Corporation of Ceylon.

In order to enable producers to market their milk to the Milk Board, the Board has established Milk Collecting Centres at points central to the producing areas, at an approximate cost of 2 lakhs each. Three such centres with a storage capacity of 12,000 pints each, have been established at Illupadichenai, Amparai, and Kanchirankudah. More such centres will be established in 1970. These centres will also accommodate the extension of the veterinary staff of the Milk Board and the Department of Agriculture. Thus, the producers will be able to market their milk and also obtain technical advice, veterinary aid and be able to discuss their problems at one place. In this manner it is envisaged to make these centres the hub of all dairy development in that erea.

With the active co-operation of the District Administration and the Cooperative Department, Dairy Co-operative Societies are being established in each D. R. O's division. These societies have been a long felt need and will provide the Board and the Department of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Agriculture with a means by which advice and assistance can be channelled to the individual producer. The aims and objectives of these societies are more broadbased than to serve merely as purchase and marketing organisations. They will be a safeguard against indebtedness of the small producer to the mudalalis. The societies will site collection points at which milk from each village will be collected and then transported to the Board's Milk Collecting Centres.

Hence, it can be seen that it is our intention to use the potential available and develop the dairy industry in this District. The old saying that Batticaloa was a land flowing with milk and honey will in fact be a reality. But, it is now a challenge to the milk producers of this District to make use of the available services and take to scientfic breeding of livestock and production of milk. This will not only be a very profitable uudertaking but will also make them proud of being partners in a national venture, which is striving to make this fair isle of ours self-sufficient in milk and save valuable foreign exchange for development.

**S. S. Stephens**

Dairy Development Officer,
Milk Board.



**Visit :-** **Phone: 271**

# LAKE VIEW HOTEL

Foreign Liquor & Arrack served with Meals Etc. to Visitors

## BATTICALOA.

—★—

Dealers in:

★ Patent Medicines
★ Groceries
★ Stationery
★ Toys
★ Glassware Etc.
★ Cakes
★ Sweet Drinks
★ Globe Brand Butter
★ Elephant Brand Mineral Water
★ Thamshar Manila Cigars Etc.

**Agent. Times of Ceylon**

Chief Organisor

**National Lotteries Board Sweep Tickets**

BRANCHES:

**Galoya Merchants,**
No. 10 & 11, **New Market,**
**Amparai.**

**Galoya Merchants,**
No. 2, **Market,**
**Hingurana.**

D. KURUNERU, J. P.
Proprietor.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**factory construction**

INDUSTRIAL BUILDINGS, STORES, WAREHOUSES AND STEEL STRUCTURES FOR ALL PURPOSES

**SAMUEL SONS & CO LTD**

371, OLD MOOR STREET, COLOMBO 12, PHONE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொண்டால், தனியாக ஓர் சடங்காகச் செய்யமாட்டார்கள். தனியாக மோதிரம் மாற்றும் சடங்கைச் செய்வதென்றால் மணமகன் மணமகளுக்கென்று ஒரு மோதிரம் செய்து தனது விரலில் அணிந்து கொள்வார். அதேபோல் மணமகள் மணமகனுக்கென்று ஒரு மோதிரம் செய்து தனது விரலில் அணிந்து கொள்வாள். அதே போல் இருவரும் புது ஆடைகளும் வாங்கிக் கொள்வார்கள். மணமகள் ஒரு வேட்டியும் ஒரு சால்வையும் வாங்கிக் கொள்வாள் மணமகன் ஒரு சேலையும் ரவிக்கைத்துண்டும் வாங்கிக் கொள்வார். புது ஆடைகளை மாற்றிக் கொண்டபின்னர் இருவரும் விரல்களைப் பற்றி மோதிரங்களை மாற்றி அணிந்து கொள்வார்கள் இத்துடன் மோதிரம் மாற்றிக்கொள்ளும் சம்பிரதாயச் சடங்கு நிறைவெய்தும்.

திருமணநாள் தொடங்கியவுடன் இருபகுதியாரும் வெற்றிலை வைத்து சுற்றத்தவர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் சொல்வார்கள். வட்டாவில் வெற்றிலையும் பாக்கும் வைத்து வீடுகளுக்கு கொண்டு செல்வார்கள். அப்பொழுது திருமணச் செய்தியைச் கூறுவார்கள். அதனைக் ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியகக வெற்றிலை பாக்கினை எடுத்துக்கொள்வார்கள். திருமணத்திற்கு வாருங்கள் என்று அழைப்பதை வெற்றிலை வைத்தல் சம்பிரதாயச் சடங்கு என்று வழங்குவார்கள்.

திருமணச் சடங்கினுக்காக இரு வீட்டிலும் மணப்பந்தல்கள் அமைப்பார்கள். பெண் வீட்டிலே மிகவும் பெரிய அளவிலே பந்தல் போடுவார்கள். வாசலிலே தோரணமோ அல்லது பெரிய வளைவுகளோ அமைப்பார்கள். பந்தலின் ஒரு கோடியிலே மணவறை அமைப்பார்கள். இந்த மணவறை கண்கொள்ளாக் காட்சியாக அலங்கரிக்கப்படும்.

*மணவறைக்கு முன்னர் அரசாணிக்கால் நடுவார்கள். அரசமரக் கிளையொன்றும், கரும்பொன்றும் சேர்த்து அரசாணிக்காலுடன் கட்டுவார்கள். அரசாணிக்காலின் கீழ்ப் பகுதியிலே பட்டுச்சேலை ஒன்றினைச் சுற்றிக் கட்டிவிடுவார்கள். அரசாணிக்காலுக்கும் மணவறைக்கும் இடையில் பார்ப்பனர் அமர்ந்திருந்து தீ வளர்க்கும் ஓமகுண்டம் தயாரிக்கப்படும்.

ஓம குண்டத்தினுக்குப் பக்கத்திலே பூணூல் சுற்றப்பெற்ற வெண்கலச் செம்புகள் கும்பங்களாக வைக்கப்படும். இக் கும்பங்கள் அனைத்தும் சேர்த்து ஒன்றாக்கப்படும். பார்ப்பனருக்கு வேண்டிய ஏராளமான பொருட்கள் சடங்கின்பொருட்டு பக்கலிலே வைக்கப்படும்.

மணப்பெண்ணின் சகோதரன் மாப்பிள்ளை வீட்டினுக்குச் சென்று மணமகனை நீராட்டுவதற்கு அழைத்துச் செல்வார். மாப்பிள்ளையின் தலையில் அரைப்பினை வைத்து கிணற்றில் தண்ணீர் அள்ளி நீராட்டுவார். மணப்பெண்ணின் சகோதரன் மாப்பிள்ளைத் தோழனாகி, திருமணச் சடங்குகள் பூரணமாகும்வரை அவருடனே இருப்பார்.

மாப்பிள்ளை நீராடிய பின்னர் புத்தாடைகள் பூணுவார். பட்டு

---

* இதுமுதலான ஆரிய மணமுறைச் சம்பிரதாயங்கள் பட்டினப் பகுதிகளில் மட்டும் பெரும்பாலும் கையாளப்பட்டு வருவன. இக்கலப்பு மட்டக்களப்பிற்குச் சிறப்பானதொன்றன்று.
—ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டி உடுத்து பட்டுச்சட்டை போட்டு பட்டுச்சால்வையும் போடுவார். அத்துடன் தலையில் தலைப்பாகையும் கட்டிக்கொள்வார். கழுத்தில் தங்கமாலைகளும் மலர் மாலைகளும் அணிந்துகொள்வார்.

அலங்கரித்த மணமகளை அழைத்துக்கொண்டு ஊர்வலம் தொடரும். மணமகனின் சகோதரி கூறை தாலி வைக்கப்பட்ட பெட்டியினைத் தூக்கிக் கொள்வார். மணமகள் பகுதியினர் முன்னர் கேட்டுவந்த பெட்டிகளில் பலகார இனங்கள், பழவகைகள் நிரப்பிப் பெண்கள் தூக்கிக் கொள்வார்கள். மணமகனின் தாய் மங்கலப் பொருளான வெற்றிலை வட்டாவை முன்னால் தூக்கிக் கொள்ள உறவினர்களும் விருந்தினர்களும் புடை சூழ ஊர்வலம் தொடரும்.

நாதஸ்வர வித்துவான்கள் தங்கள் திறமையைக் காட்ட பெண்கள் குரவையிட வெடிகள் அதிர மாப்பிள்ளை ஊர்வலம் மணமகள் இல்லத்தை நோக்கிச்செல்லும்.

மணமகன் மணமகள் வீட்டு வாசலைச் சமீபித்தவுடன் மைத்துனர் உறவு கொண்ட ஒருவரோ அல்லது மாப்பிள்ளைத் தோழனோ, மணமகனின் கால்களை மஞ்சள் நீரினால் கழுவுவார். விசுவாசம், அன்பு, நம்பிக்கை, பரஸ்பரம், நன்றி என்பவைகளை வெளிப்படுத்தவே இச் சடங்கு நடைபெறுகிறது. மணமகன் கால்களைக் கழுவியதற்கு பிரதி உத்தரமாக தனது விரல்களில் அணிந்திருக்கும் மோதிரங்களில் ஒன்றைக் கழற்றி கால் கழுவியவரின் விரலில் அணிவிப்பார். இதனைத் தொடர்ந்து இரண்டு பெண்கள் தீப வரிசைகள் கொண்ட பல்வேறு வகையான ஆலாத்திகளை எடுப்பார்கள். பின்னர் திருஷ்டிப் பரிகாரமாக கண்ணூறு கழிப்பார்கள். வாசல் இருந்து மணவறை வரையும், மணமகன் செல்வதற்கு நிலபாவாடை விரிக்கப்பட்டிருக்கும். மணமகன் முதலில் வலக்காலினைத் தூக்கி வைத்து நில பாவாடையில் நடப்பார். மாப்பிள்ளைத்தோழன் மணமகனின் கரத்தினைப் பற்றி அழைத்து வந்து மணவறையிலே அமர்த்துவார். இனிப் பார்ப்பனர் திருமணச் சடங்கினைத் தொடருவார். வேதமந்திரங்கள் சொல்லிப் பார்ப்பனர் முதலில் மாப்பிள்ளைக்கு காப்புக்கட்டுவார்.

ஓமகுண்டலத்திலே தீயினை வளர்த்து பார்ப்பனர் திருமணச் சடங்கினை ஒவ்வொன்றாகச்செய்வார். வேதமந்திரங்களை ஓதி ஓமகுண்டத்து தீயின் சாட்சியாகத் தாலியினை மணமகனிடம் கொடுப்பார். மணமகன் மணமகளின் கழுத்தில் தாலியினைக்கட்டுவார். இந்தவேளை கெட்டிமேளம் மணவீடே அதிரத்தக்கதாக எழும். மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதற்கும் பல்லிகத்துதல், தும்முதல் போன்ற அபசகுனங்களின் நிகழ்ச்சிகள் மணமக்களுக்குக் கேட்காமலிருக்கவே தான் கெட்டிமேளம் முழங்குகிறது.

தாலிகட்டிய பின்னர் மணமக்கள் மணவறையில் இடம் மாறி அமர்வார்கள். இந்தவேளை மணமகளின் தந்தை மகளின் கையினைப் பற்றி மணமகனிடம் ஒப்புவித்துத் தாரைவார்த்துக் கையளிப்பார். மணமகன் மணமகளின் விரலினைப் பற்றிக் கொண்டு கும்பங்களையும் ஓம குண்டத்தையும் சுற்றிக் கொண்டு வருவார்கள். முதலாவது சுற்று முடிந்ததும் அம்மி வைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கும் மூலையினுக்கு மாப்பிள்ளை மணமகளை அழைத்துச் செல்வார். மணமகள் தனது வலக் காலினால் அம்மியை மிதிப்பாள். இதுஅம்மி மிதித்தற் சடங்கு எனப் படும்.

கும்பத்தை மூன்றுவது முறையாகச் சுற்றிக் கொண்டு வரும் போது தண்ணீர் நிரப்பிய குடத்தினுள் இருக்கும் மோதிரத்தை எடுக்கும்படி மணமக்கள் கேட்கப்படுவார்கள். இருவரும் மோதிரத்தை எடுத்துக்கொள்ள குடத்தினுள் கை போடுவார்கள். குடத்தில் இருக்கும் மோதிரத்தைத் தேடி எடுப்பதில் மணமகளே வெற்றி பெற வேண்டுமென்பதே சம்பிரதாயமாகும்.

மணமகன் மணமகளை திறந்த வெளியினுக்கு அழைத்துச் சென்று வானத்தில் சுடர்விட்டுத் துலங்கிக் கொண்டிருக்கும் அருந்ததி நட்சத்திரத்தைச் சுட்டிக் காட்டுவார். அருந்ததியைப் போல் கற்புடைய மனைவியாக வாழ வேண்டுமென்பதற்காகவே இச்சடங்கு நடைபெறுகிறது. இதன் பின்னர் மணமக்கள் வந்து மணவறையிலே அமருவார்கள். பார்ப்பனரும் அவரது உதவியாளரும் திரையினை மறைத்துப் பிடிக்க மணமக்கள் பால், பழம், அருந்துவார்கள். மணமகன் அருந்திய மிகுதிப் பாலை மணமகள் அருந்துவாள். பின்னர் பார்ப்பனர் ஒருபுறமாகக் கட்டப்பட்டிருக்கும் வெள்ளைப் பசுவையும், கன்றினையும் நற்சகுனத்திற்காக மண மக்களுக்குச் சுட்டிக்காட்டுவார். சகுனம் பார்த்த பின்னர் மணமக்கள் வீட்டினுள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

வீட்டினுள் மணமகள் மணமகனுக்கு உணவு படைப்பாள். இதனைக் கலத்தில் போடுதல் என்பார்கள். ஏழு வகை மரக்கறிகள் சமைக்கப்பட்டிருக்கும். சேர்வைக் காலில் வட்டி வைத்து அதனுள் மணமகள் சோற்றையும் ஏழு மரக்கறிவகைகளையும் படைப்பாள். ஏழு கறியையும் சோற்றையும் பிசைந்து மணமகன் மூன்று கவளம் மூன்று தடவை உண்பான். மணமகன் உண்ட பின்னர் எஞ்சியதில் மூன்று கவளம் மணமகள் உண்பாள்.

பின் தாம்பூலம் தரித்துக் கொள்வர். மணமக்கள் வந்து முன்போல் மணவறையில் அமருவார்கள். இத்தடவை மணமகள் கூறைச்சேலை உடுத்து கூறைச் சட்டை அணிந்திருப்பாள். திருமணச் சடங்கின் இறுதிக் கட்டமாக பெற்றோர்கள் மணமக்களை வாழ்த்த, அவர்கள் பெற்றோர்களின் கால்களில் வீழ்ந்து வணங்கியெழுவார்கள். பின்னர் சுற்றத்தவர்கள், விருந்தினர் மணமக்களை வாழ்த்துவதுடன் பரிசுகளும் வழங்குவார்கள். அத்துடன் திருமணச் சம்பிரதாயச் சடங்கு நிறைவுறும்.

மட்டக்களப்புத் தமிழர்களது திருமணச் சம்பிரதாயச் சடங்குகளை நோக்கினால் எமது முன்னோரான பழந் தமிழர்களின் திருமணச்சடங்குகளை இன்னும் காணக் கூடியதாக இருப்பது ஓர் வரப்பிரசாதமேயாகும்.

வணக்கம்.

அருள். செல்வநாயகம்,
குருமண்வெளி,
களுவாஞ்சிக்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FISHERIES

by

**K. Selvaratnam,** D. R. O., Eravur Pattu.

In the Eastern coast, which is the second largest fish producing area in Ceylon, fishing, as an industry, comes second only to paddy-cultivation. Its long sea coast, with suitable bays at intervals, coupled with the rivers and their mouths, the miles-long lagoon, the innumerable tanks and water-holes, provide ample scope for this industry.

Originally, fishing in this area was confined to fresh water in tanks and rivers, with the traditional cast nets and the novice lines as the mode of fishing. The innumerable tanks, both irrigation and village, provided enough facilities for fresh water fishing. The oil content and special taste of the Viral, the Loole, the Senganan, the Kokkichan, and the Sethal have earned for them an exclusive reputation. The recently introduced "Thilapia", popularly known as "Yappan", is such a heavy breeder that it has surpassed all other varieties in number and has even successfully displaced the indigenous species. It provides cheap bulk and thus enables the less fortunates to have their quota of fish. It is said to be rich in its oil and fat content though the taste and smell are not as attractive as those of the indigenous species. The modes of fishing here are the cast nets, and the Athangu - a hand-net with a stick frame, and the novice lines. There is also the primitive form of Karappu, a cage-like implement made of sticks, and the Thandi - adi Athangu. These are extensive fishing kraals with a team of men taking part where all species, big or small, find it difficult to escape. These methods are now giving way to more modern ones.

The Batticaloa Lagoon provides for large-scale fishing with various modes. The miles - long lagoon explains the growth of several fishing villages. Thuraineelavanai was famous for its large - sized Koduwa - (Mullet). The fishermen, here in addition to the traditional cast-net, adopted the "Sillu Valai" - a big-sized cast-net, which, varying from 100 to 1000 square feet, was operated by a team of men, the number depending on the size of the net. This fish and, especially its roe, are considered a delicacy. The Paddiruppu fisherman, in addition to the traditional cast-net, has a diversion in the "Sool" catch. He goes in 'oru' boats with a burning torch and the fish that jumps for the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

glow of the torch is killed by throw-spikes with an attached long rope. The principle underlying this, is that the healthiest fish jumps highest, and it becomes the target. This practice has a blend of sport with fishing. The Kayal fish that falls a victim to this mode of fishing is good eating and has to be bought at a price. The present day fishermen, however, are too busy to waste their time in this mode of precision fishing. The Pala fish around Araipattai, caught with the throw-ropes during the North East Monsoon, compares favourably with any sea-species of fish. The Kallady, Batticaloa areas, are famous for their Otti and Ora which are not sold by the pound but at a price, as a delicacy. The lagoon crowns it all by the more famous "Singing Fish."

The Batticaloa lagoon and the many Kalapus along the coast, are famous for the Prawns and Crabs. In fact, the Batticaloa prawns are said to be the best. Prawns are caught by the Cast-net and the "Athangu" in the lamp light, while crabs are caught in cages or on lines with bait. It is unfortunate that there have been no organised marketing facilities for the fishermen to get the best price. There are no modern methods of preservation adopted for the fish to be taken to the towns. Even the canning of prawns and crabs should prove to be economic concerns.

Sea fishing, as a trade, is a recent innovation dating back to about fifty years, introduced originally by the migrant fishermen from the South. The oldest mode of sea-fishing had been the Madhal fishing with the customary drift nets. Today, a nylon net is used with a long "con-net" on either side, attached to thick long ropes. This needs a broad beach, a sea-faring oru boat under the command of a Thindal and a team of men on the shore. They operate on a Kottu licence and follow the Padu basis, the turns depending on the number of boats and nets that claim a right. With all the experience and skill of the Thindal, this is mostly speculation till the catch reaches the beach. Madhal fishing has since ceased to be a preserve of the immigrant fishermen. The local Muslims and Tamils have taken to this mode in all the popular fishing centres. These men have mostly organised themselves into co-operative fishing societies and are enjoying credit and other facilities.

There are several forms of "Lines" the fishermen adopt. This method is mostly adopted by the immigrant fishermen from the South. They go far out into the sea in small Oru boats, have them anchored, and then operated their lines. Various types of lines are used, depending on the fisherman's individual capacity and his financial resources. This method is considered sufficiently remunerative in proportion to the capital and the effort. but it is not modern enough to compare favourably with nylon net-fishing.

Nylon has been used more extensively for the fishing industry than for any other. This net is used in pieces of varying dimensions joined up to suit the person and the mode of fishing. This mode of fishing provides the bulk for local consumption and for icing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and transport to other districts. This is widely used in all fishing centres along the coast from Valaichchenai to Arugambay. There are local men, district immigrants and the immigrants from the South, engaged in nylon net fishing. The fishermen immigrate with no system or cotrol, causing untold confusion in the administration. This becomes worse, as is very often the case, when the beaching space and the wadi areas are limited in the various centres.

There is often a clash of interests between the different groups. Such disputes are difficult to be settled, as there are no organised plans or regulations to follow. Though the local conditions and formalities are relevant, an organised, comprehensive planning is necessary to direct and guide the development of the industry. This has to be studied carefully and, on the basis of the data available, an overall plan should be worked out, providing for more modern and successful methods and forms. The proposed fishery harbours should come in, along with such plans.

The marketing of fish has been a serious problem. Apart from supplying the local market, the old practice has been to cure the fish, dry it, or preserve it in salt supplied by the Department at a concession price. The present practice is to hand it over to Fish Mudalalis who are operating with well-organised wadis and transport fleets. These Mudalalis advance large sums of money to the fishermen and the latter are bound morally to supply the fish at only a fraction of the market price. Some Mudalalis even organise hooch and gambling sessions to provide entertainment and thus they make large sums of money.

The fisheries Corporation is a poor competitor in this field. The Corporation, with its procedures, is very cumbersome and irksome to the fishermen. The Corporation can only recommend loans to the People's Bank. But The fishermen need immediate cash for their hooch, the gambling table or for an urgent call from home. The Corporation's offer of a recommendation to the People's Bank does not satisfy the fishermen. The Corporation is also helping the fishermen to get loans to improve their implements, in addition. The Corporation is making progress but has a very long and difficult way to go. The Mudalalis are influential men with initiative and tact and it will not be that easy to oust them.

The Government is helping the fishermen by granting them loans for the purchase of mechanised boats and by selling implements at subsidised prices. Only those fishermen who have some capital, can avail themselves of these facilities. For the beginner, the facilities are not made available. The Government grants relief, but only up to Rs. 300/- (Three hundred) to the fishermen who suffer loss of implements under circumstances beyond their control.

The Government has constructed several fisheries roads through the assistance of the local bodies. It will be desirable to have these maintained and improved. The Government has planned to construct fishery harbours with cold storage facilities at the important fishing centres.

The potential in this area is very high and it is heartening that this is recognised. More facilities for fishermen to preserve the catch, better organised marketing facilities, more credit facilities, more social amenities like housing schemes, sports facilities, insurance schemes, etc., are necessary to have this trade well developed. With these facilities, an organised comprehensive plan will make the trade more attractive and productive.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PE...
NA... UR...

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிலைச் செய்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேளாண்மைச் செய்கை, உபஉணவு பயிரிடுதல், மீன்பிடித்தல், நெசவு, அரசாங்க உத்தியோகம், வியாபாரம், கைத்தொழில் முதலியவை மக்களின் முக்கிய தொழில்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறே இப்பகுதியிலுள்ள குருக்கள்மடம், செட்டிபாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிகுடி, எருவில் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்களிற் பெரும்பாலோர் வெற்றிலைச் செய்கையை ஒரு பிரதான தொழிலாகக் கருதி வருவதுடன் இதனுதவியினாலேயே தம்து சீவியத்தையும் நடாத்தி வருகின்றனர். சிலர் தங்கள் உத்தியோகங்களுடன் ஒரு உப தொழிலாகவும் கடைப்பிடித்து வருகின்றனர்.

சகல கிழக்கு மாகாண மக்களுக்கும் போதுமான அளவு வெற்றிலையை, இங்கு உற்பத்தி செய்து வருகின்றனரென்றே கூறலாம். வியாபாரிகள் இவ்வெற்றிலைகளை வாங்கி கல்முனை, மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை முதலிய இடங்களுக்குச்சென்று விற்பார்கள். 50 வெற்றிலை கொண்ட பிடி ஒரு ''பகளியாகும்'' இப்பகளி ஒன்று ஐம்பது சதத்திலிருந்து எழுபத்தைந்து, தொண்ணூறு சதம்வரை விலைப்படுகிறது. வெற்றிலைத் தோட்டத்தையே நம்பி வாழும் ஒரு தொழிலாளி 3, 4, 5 தோட்டங்கள் வரை வைத்துப் பராமரிப்பர். சாதாரணமாக 9 கீற்றில் ஒரு தோட்டம் வைத்திருப்பவர் இருபத்திரண்டுமுதல் முப்பது நாட்களுக்கொருதரம் 200ல் இருந்து 300 பகளி வரை வெற்றிலை பறிக்கலாம். இதனால் சராசரி மூன்று தோட்டங்கள் வைத்துப் பராமரிக்கும் ஒருவர் மாதம் ரூபா 250/—ல் இருந்து 350/- வரை ஊதிபம் பெற்று தமது சீவியத்தை நடாத்துவர்.

இலங்கையில் கம்பகாப்பகுதியே வெற்றிலைச் செய்கைக்குப் பேர் பெற்றபெற்ற இடமாகக் கருதப்படுவதாக பூமிசாத்திர வாயிலாக அறியப்படுகிறது. அப்படியிருந்தபோதிலும் அங்கு விளையும் வெற்றிலையிலும் பார்க்க மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்பத்தியாகும் வெற்றிலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் மிகவும் உன்னதமானதென்றே கூறப்படுகிறது. கம்பகாப் பகுதியில் உற்பத்தி செய்யும் வெற்றிலையை ''மலை வெற்றிலை'' யென்றும், மட்டக்களப்பு மாவட்டத்தில், குறிப்பாக பட்டிருப்புத் தொகுதியில் உற்பத்தியாகும் வெற்றிலையை 'நீர்வெற்றிலை' என்றும் கூறுகின்றனர். இவ்வெற்றிலை சாப்பிடுவதற்கு நல்ல உருசியாகவும் தேகாரோக்கியத்திற்கு உகந்த சத்துள்ளதாயிருப்பதாகவும் இதைச் சாப்பிட்டு அனுபவம் வாய்ந்தவர்கள் கூறுவர். சாப்பாட்டை ஜீரணிப்பதற்குரிய குணமும் வெற்றிலையில் அடங்கியிருப்பதாகச் சொல்வர். எனினும் இதில் இருக்கும் சத்துகள் பற்றி ஆராய்வது சாலச் சிறப்புடையதாகும்.

இவ்வாறு தரம் கூடிய சிறந்த வெற்றிலைச் செய்கைக்கு ஊக்கமளித்து இத்தொழிலைச் சிறந்த முறையில் விஸ்தரிப்பதற்கான உதவிகளை நல்குவது அரசாங்கத்தின் இன்றியமையாத கடமையாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்பயிர் எவ்வாறு செய்கை பண்ணப்படுகிறது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

**வெற்றிலைத் தோட்டம் அமைப்பதற்கான இடம்:**

பள்ளமற்ற புழுதி மணல் செறிந்த இடம் வெற்றிலைத் தோட்டச் செய்கைக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. ஏறக்குறைய மூன்று அடி ஆழம் வரை மண்வெட்டியினால் கீழ் மண் மேலே வரக்கூடியதாகக் கொத்தி நிலத்தைப் பண்படுத்தி ஒரு மேடு அமைப்பர். இது நடும் வெற்றிலைக் கொடியின் எண்ணிக்கைக்கு ஏற்றளவு பெரியதாகவோ சிறியதாகவோ அமையும். சாதாரணமாக 20 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட ஒரு இடத்தில் சுமார் 3240 வெற்றிலைக் கொழுந்துகள் நடலாம்.

பண்படுத்திய இம்மேட்டில் பந்தற்காலின் உதவியினால் பந்தலிட்டு விண்ணாங்குமர இலை, அல்லது மருதமர இலை போன்ற அடர்த்தியான இலை குழைகளால் வெயில்படாவண்ணம் நன்கு மறைத்து, சுற்றிவர வேலியும் இடுவர். கொழுந்து நடுவதற்கு ஏற்றவாறு அடைப்புக்குள் இருக்கும் மேடையை பள்ளம் மேடு இல்லாதவாறு பரவி அண்டும்வரை தண்ணீர் ஊற்றிப் பண்படுத்துவர்.

**வெற்றிலைக்கொழுந்து நடுதல்:**

இவ்வாறு பண்படுத்திய இடத்தில் வெற்றிலைக்கொடிகளை புருவம் புருவமாகவும், கீற்றுக்களாகவும் நட்டு முடிப்பர். இரண்டு அங்குலத்திற்கு ஒரு கொடி வீதம் 12 கொழுந்துகள் ஒரு புருவத்தில் நடுவர். ஒரு புருவத்திலிருந்து அடுத்த புருவத்திற்கு 6 அங்குல இடைவெளியிருக்கத்தக்கதாக ஏறத்தாழ 30 புருவங்கள் வரை 9 கீற்றுக்களுடன் ஒரு தோட்டம் அமையும். 12 கொழுந்துகளுக்கு ஒரு பெரிய இடைவெளி வீதம் தொழிலாளி போய்வருவதற்கு இடைவெளி விடுவர். இந்த இடைவெளி 12ல் இருந்து 18 அங்குலம் வரையுடையதாக இருக்கும். தோட்டக்காரர் இவ்விடைவெளியினூடே சென்று தண்ணீர் ஊற்றிப் பராமரிப்பர்.

நன்கு முற்றிய வெற்றிலைத் தோட்டங்களிலேயே நடுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்துகளை வெட்டி எடுப்பர். ஒரு வெற்றிலை அல்லது தளிருடன் இரண்டு வெற்றிலை கொண்டகொடி களாக இவற்றை வெட்டி எடுப்பர். இவை சுமார் ஒரு சாண் நீளமுள் ளனவாயிருக்கும்.

**நடும்முறை:**

ஏழு, ஒன்பது, பதினாறு கீற்றுத் தோட்டங்களாகவே பெரும்பாலும் வெற்றிலைத் தோட்டங்கள் அமை யும். ஒன்பது கீற்றுத் தோட்டமாக இருந்தால் கீற்றுக்கு ஒருவர் வீதம் கொழுந்து நடுவதற்கு ஒன்பது ஆட் கள் தேவைப்படுவர். வெற்றிலைச் செய்கையில் அனுபவம் வாய்ந்த வர்களையே இதற்கு ஒழுங்கு செய்து கொள்வர். கயிறு இழுத்து புருவம் புருவமாகவும் கீற்றுக்களாகவும் நிரைப்படுத்தியே வெற்றிலைக்கொடி களை நடுவர்.

**பராமரிப்பு முறை:**

கொழுந்து நட்ட நாளில் இருந்து வேர்பிடித்துத் தளிர் வரும்வரை நாளாந்தம் தண்ணீர் ஊற்றிவருவர். தளிர் விடத் தொடங்கிய நாள் முதல் ஒன்றைவிட்டு ஒருநாளைக்குப் பின் தண்ணீர் எப்பொழுதும் ஊற்றி வருவர். இருபத்திரண்டு முதல் முப் பது நாட்களுக்கு ஒருமுறை மாட்டு எரு மண்ணுடன் கலந்து வெற்றி லைத் தோட்டத்திற்கு இடுவர். வெற்றிலைக்கொடி ஒரு சாண் அள வில் வளர்ந்ததும் கொடிக்கு ஒரு குத்துக்கம்பு வீதம் (ஒரு அலம்பல்) நட்டு 'ஆரிக்கையால்' கொழுந்தை கம்புடன் சேர்த்துக்கட்டி வளர விடு வர். தென்னை மரத்தின் குருத் தோலையை வெட்டி ஈர்க்கிலை வேறாக நீக்கி, வெயிலில் உலரவிட்டு சிறு சிறு ஆரிக்கைகளாகக் கிழித்து வெற்றிலைக்கொடி பாதிக்கப்படாத வண்ணம் கொடி வளர வளர கம்பு டன் சேர்த்துக்கட்டிவருவர்.

**வெற்றிலை பறித்தல்:**

வெற்றிலைக்கொடி நட்டு வளரத் தொடங்கி ஏறக்குறைய ஆறுமாதங் களின் பின்பு வெற்றிலை பறிப் பதற்கு முயல்வர். ஆரம்பத்தில் கூடிய பலனை எதிர்பார்க்க முடியாது போனாலும், நாள் செல்லச்செல்ல வருவாய் கூடிக்கொண்டேயிருக்கும். இருபத்திரண்டு நாள்முதல் 30 நாட் களுக்கு ஒரு தடவை வெற்றிலை பறித்துவருவர். வெற்றிலை பறித்து முடிந்ததும் அடுத்த நாள் எருப் போட்டுத் தண்ணீர் ஊற்றிப் பரா மரித்துவருவர்.

**வெற்றிலை அடுக்குதல்:**

வெற்றிலைகளைக் கீற்றுக்கீற்றாகச் சென்று கைப்பெட்டியில் பறித்து சாக்குகளில் அடைத்து வெயில் படாவண்ணம் பாதுகாத்து வைப் பர். வெற்றிலைகள் முழுதும் பறித்த பின்பு ஓரிடத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் அமர்ந்திருந்து சிறிய னவும் பெரியனவுமாகிய வெற்றிலை களை வேறாக்கி, தரப்படுத்தி ஐம்பது வெற்றிலையுள்ள பிடிகளாக அடுக்கு வர். இவ்வாறு அடுக்கப்பட்ட வெற்றிலைப் பிடிகளை 'பகளி' என் றும் 'கட்டு' என்றும் கூறுவர்.

**வெற்றிலைக்கொடியை இறக்கிப் பதித்தல்:**

ஒரு கொடிக்கு ஒரு கம்புவீதம் நட்டு வெற்றிலைக்கொடி படர விடப் படுகிறது. இக்கம்பின் நீளம் ஏறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ பத்து அல்லது பதின்மூன்று அடிவரையுள்ளதாகும். வளர்ந்த கொடிகளை திரும்பவும் நிலத்திற்குள் நோப்படாதவண்ணம் இறக்கி புருவம் புருவமாக ஒரு அடிவரை மேலே வைத்து மீதியை நிலத்திற்குள் பதித்துவிடுவர். இவ்வாறே கம்பின் மட்டம்வரை கொடி வளர வளர நிலத்திற்குள் அதைப் பதித்து மேற்குறிப்பிட்டபடி எருவும் தண்ணீரும் இட்டுக் ''கண்ணை இமைகாப்பது போல்'' பாதுகாத்து வருவர்.

**வெற்றிலைக்கு ஏற்படும் நோய்:**

வெற்றிலை கருகுதல், சுருளி பிடித்தல், கண்ணடைப்பு, புழுவெட்டுதல், கொடி அவிதல் ஆகிய நோய்கள் வெற்றிலைக்கு ஏற்படுவதுண்டு.

இதில் ''கொடி அவிதல்'' வியாதி மிகவும் கொடியதாகும். இது ஒரு வித பூஞ்சணத்தினால் ஏற்படும் தொற்றுநோயாகும். அவியல் வருத்தம் ஒரு கொடியிற் பிடித்துவிட்டால் கொடிகள் யாவும் அழுகிப்போகும் என்று தொழில் செய்பவர்கள் அஞ்சுவார்கள். அந்நோய் அணுகா வண்ணம் நல்ல மண் முதலியன தேடிப் போடுவர். ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்பதற்கிணங்க, நாளாந்தம் தோட்டத்தைப் பார்வையிட்டு, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிலைச் செய்கையில் ஈடுபடுபவர் பாதுகாத்துப் பராமரித்துப் பயனுமடைகின்றனர் என்பது கண்கூடு.

**கோ. பாக்கியராசா,**
களுவாஞ்சிகுடி.

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No ........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Batticaloanian's Heritage

## 1. The Batticaloa District – its situation and extent.

The Batticaloa District, inclusive of the Division of Amparai, (a recent partition for administrative convenience) stretches from Verugal Ganga in the north to Kumbukkan Aru in the south, over a distance of 150 miles along the coast of the Indian Ocean (Bay of Bengal).

## 2. Our Peoples.

The origin of the majority of the Batticaloa peoples is bound up largely with the relations between the Arabs and the Mukuwas.

Tradition has it that some of the Hashimite Arabs who emigrated to various lands, after the death of the Holy Prophet, settled along the coast of Malabar. The Mukuwas who formed the indigenous population of the Malabar coast, readily welcomed the Arabs, but, later, embarrassed by their efforts to convert them to the Islamic faith, emigrated to Ceylon. Some of these Mukuwas who migrated to the Batticaloa district, sought the help of some ship-wrecked Arabs who were their guests, when attacked by the Thimilars, the ruling powers of that area. The help rendered by the Arabs to the Mukuwas, led to a close friendship between the two and, finally, to inter-marriage, out of which arose the large majority of the Batticaloa Moors. Their numbers have been added to, by fresh settlements of Muslims in the Batticaloa district, from time to time.

This tradition accounts for the co-existence of the Moors and the Tamils as two separate races, each with its own distinctive culture, religion and way of life.

## 3. Our land and Water Resources.

I fully believe in the dictum: "Working with each other, and with water, light and soil, men can change a valley's face and its life". Until a few years ago, Ceylon's development had been mainly confined to the uplands and the Wet Zone in the production of cash crops. The Government has since turned its attention to the Dry Zone for development. And for such development, the three basic essentials are, provision of stored water, cheap electricity and the prevention of soil erosion and floods.

This district could easily become the "bread basket" of "Sri Lanka", if our natural resources are viewed with the statesman's eye, unbiased by provincial or political considerations. This District can be easily made to procure an all-Island self-sufficiency in food.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Here are Batticaloa's four glories. Firstly, we have about a dozen rivers which could be "reservoired" to provide us with an assured water-supply even during years when the monsoon fails. Secondly, we have a very extensive acreage of virgin land eminently suitable for paddy. Thirdly we have a healthy dry climate, and fourthly, and above all, we have an enormous manpower steeped in century-old farming traditions. As a first step to harness these glories, or, if I may say so, to awaken this sleeping beauty (that is Batticaloa) so richly endowed by nature, the Gal Oya Reservoir was constructed. On the eve of its completion, a few weeks before his tragic death, the Right Honourable D. S. Senanayake, the then Prime Minister, handed over to me on 11-6-1951, a Testament which reads thus:

"I visited the Gal Oya Project on the 10th June 1951 and have seen for myself the progress of the development work here. The Scheme is well on its way to early fruition. On this day, I recall with pleasure the great enthusiasm displayed by Gate Mudaliyar M. S. Kariapper over the Scheme from the very beginning. It is exactly a decade since I cut the first tree on the site of the dam as an earnest of our sincere desire for the ecomomic upliftment of these parts. Gate Mudaliyar M.S. Kariapper who never relaxed his efforts to see the Scheme fully implemented, should be a happy man today to see those entrusted with the work, making such great progress. He and I have jointly realized our dream".

(Sgd) D. S. Senanayake,
Amparai, Prime Minister.
June 11. 1951.

The solemn desire of the late Prime Minister has not been implemented vis-a-vis "the economic upliftment of these parts". The landless peasantry of these parts, whose economic upliftment is promised in this Prime Ministerial Testament of 11-6 1951, have received only a few crumbs that fell from the table of the Gal Oya Development Board. And, as if to add fuel to the smouldering fire of discontent in the breast of the local farmer, ten thousand acres had been set apart to feed the "White Elephant" (Sugar Factory) at Hingurana. The most tiresome job in the management of this Factory is to find, year after year, fresh reasons to account for its recurring losses and escape the frowns of the Central Government and the Parliament. The Officers in charge are certainly not to blame. For to them has been allotted the unenviable task of growing "the right plant (sugar cane) in the wrong place (too low-lying)". The Plan Implementation Committee on the proposed Sugar Project at Uda Walawe (whose Chairman is Mr. Rajendra, presently the Secretary to the Treasury and one-time Government Agent of the Eastern Province, which included the Gal Oya Valley) has recommended that,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in view of no satisfactory solution of the major problems confronting the Gal Oya Sugar plantation being in sight, the Government should consider the alternative of using the land under sugar at Gal Oya for paddy, for which crop, it appears to be most suitable, and shifting the Sugar plant to a better location available at Uda Walawe, instead of investing what little Foreign Exchange we have, on the purchase of a new Sugar Plant. I must congratulate this Committee for hitting the nail right on its head, and express the hope that, out of no unrealistic sense of prestige, the Government will hesitate to act on this advice. The acceptance of this advice will conserve our Foreign Exchange savings as stated by the Committee, and will also bring into the National granary an additional one million bushels of paddy being the sure yield of the said 10,000 acres, besides eliminating a certain percentage of present landlessness. When the Sugar plant goes, the buildings left, can best be profitably utilized by conversion into a Paper Factory, for which the raw material (paddy straw) needed to keep it in function right round the year, is available, ad lib, close at hand. In fact none can deny that the straw in this region could feed two or more factories working to maximum production capacity all the weeks of the year. An what's more, self-sufficiency in our paper requirements will be more than assured.

In regard to the Galoya Reservoir dream referred to in the late Primier's Testament, I must confess that, as far as I am concerned, I have realized only half my dream. The other half which is a vision of this Reservoir being permanently kept at full spill level, while water from it flows out unstintedly all the year round for agricultural, electricity and other purposes, remains yet to materialize. No miracle need happen to achieve this objective. There is a point in the Uva Province, somewhere near Okkampitiya, where the perennial Kummbukkan Aru runs within a distance of about 15 miles from Galoya. The construction at this point, of a channel linking up the two rivers, will convert Senanayake Samudra into one of those God-made Samudras (oceans) which no failure of monsoons ever dries up, and this reservoir could send up water to irrigate all the Batticaloa North paddy fields as well. The need for this conversion was underlined this year and last, when the Reservoir failed to fill, and as a consequence electricity production came to a grinding halt, and cultivation acreages were severely curtailed. We must remember that the Gal Oya which feeds the Reservoir, is a North-east monsoonal stream which dries up during the latter part of the year, as this district does not get the South-West monsoonal rains. This Reservoir will remain a half-solution to our economic ills, as long as my dream is not realized in full.

There is even at this late stage, no room for pessimism, and our economic situation is still not beyond repair. A merciful Providence has blessed this district, more than any other with almost a dozen rivers, from Unnichchai in the north to Bagura Oya in the south all

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of which could be impounded into Reservoirs which could convert the entire district into an unbroken sheet of green paddy. Already, the Heda Oya Reservoir and Karanda Oya Reservoir have been estimated to cost 95 and 45 millions of Rupees, respectively. The other proposed Reservoirs await investigation. These Reservoirs would mean more than engineering feats of steel and stone. They would symbolize a victory of the human spirit in a crusade against Hunger.

Pending the construction of these Reservoirs, it is my respectful submission that the Government should deal here and now with the present 60 thousand able-bodied landless farmers itching for land and the three hundred thousand acres of virgin land, waiting to be tickled with a hoe in order to laugh with a harvest. This is unchallengeable statistics. What cruel irony of fate is it that keeps these loving partners apart, particularly when they are wishful to come togeather even on a Manawari bedding and without Governmental financial aid? Swift action within the life-span of this Parliament will pay rich political dividends, besides erasing off the growing suspicion in the minds of the indigenous population, particularly of Batticaloa South, that there had been sly political land alienations, under one pretext or the other. I know there can be no substance in this suspicion, but I note it down here, because an Administration, like Caesar's wife, must be above suspicion.

**4. Self-sufficiency in Salt:**

In the days of old, when this district was tributary to the kings of Kandy, our tribute transported in "Thawalam" to Kandy, consisted primarily of salt and dried fish. By an unfortunate swing of the pendulum, salt is to-day a scarce and expensive article of food retailed at our shops at 10 cts. per lb. On one or more occasions, I remember the Government had to import salt from Pakistan. Here is a commodity in which we can gain self-sufficiency, as the saying goes, "within 24 hours," if only the Government takes steps to develop our Kalapuwas (lewayas) or make it known to the public that they are at liberty on their own to manufacture and carry on a trade in salt. From Pannichenkerni in the North where it is said that in olden days about 10,000 bushels of salt had been collected annually, down to Bagura Oya in the south, there exist several extensive saline marshes-locally known as Kalapuwas which yield many hundreds of bushels of salt crystals in the season for collection, which is usually the dry part of the year. These Kalapuwas get submerged during the annual North-East monsoon, by irruptions of the sea which afterwards retire leaving behind a replenished saline content.

Gate Mudaliyar M. S. KARIAPPER.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனாட்டுக் கிராமியக் கவிகளில் சங்ககாலத் தமிழ்ச் சுவை.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை தித்திக்கும் கிராமியக் கவிகளின் பிறப்பிடம். சங்ககாலத்தமிழ்க் கவிதைகளும் இயற்கையோடு இயைந்தே பிறந்ததனுற்போலும், இதன் சுவைத் துளிகளை அவற்றிலும் சொட்டக் கண்டு சுவைத்து இன்புற முடிகிறது.

இதோ ஒரு காட்சி,

மாரியிலே பொங்கிப் புரண்டு வந்த சிற்றாறு வரண்டு கிடக்கிறது. ஆற்றோடையிலே வெள்ளை வெளே ரென்ற படுக்கை மணல்; அதன் பரப்பிலே இருக்கிறது, ஒரு 'பூவல்,—'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்று வள்ளுவன்குறிப்பிட்ட ஊருணியைத்தான் வாடித்தலத்து மக்கள், 'பூவல்' என்று அழைக்கிறார்கள்.

அந்தப் பூவலிலே, அதொ, நீர் அள்ளிக்கொண்டு நிமிருகிறாள் ஒரு பருவக்குமரி. எங்கிருந்தோ வந்த கட்டிளங்காளையைச் சந்தித்துக் குனிகின்றன அவள் நாவற்கனி விழிகள். வியர்த்து விருவிருத்து வந்த அவன் கேட்காமல் கேட்பது அவளுக்குப் புரிந்துவிடுகிறது. ''வாய்க்காலில் தண்ணியிலே வண்டுவிழும் தும்பி விழும்'' என்று அவள் தண்ணீர்தர மறுக்க வில்லை. குனிந்ததலை நிமிராமலே தண்ணீர் தருகிறாள். கொடுப்புக்குள் சிரிப்பு அமுங்குகிறது. தாகம் தீர, தண்ணீரை மாத்திரமா அவன் குடித்தான்? அவள் இளம் கொடியுடல் வனப்பையும் முழு எழிலையும் சேர்த்தே பருகிவிடுகிறான். நாணி நிலநோக்கிய அவள் பாசாங்கு விழிகள்தான் சும்மா இருந்தனவா?

பூவலடியிலே ஆரம்பித்த இந்தப் புதுநாடகம், நாள்தோறும் நிகழ்ந்து பழம் நாடகமாகிறது. அவனோடு நல்லாகப் பழகிவிட்டாள் அவள். ஒரு நாள் அவள் பவள இதழ்கள் குறுநகைபூத்து மலர்கின்றன. குரல் கொஞ்சுகிறது. நாணம் இழைகிறது. ''ஒவ்வொருநாளும் தண்ணீர்த் தவிப்புத்தானு,'' அவன் வாயால் பேசவில்லை, கண்ணால் பதில் சொல்கிறான்.

''ஒவ்வொருநாளும் உன்னைப் பார்க்கவேணும் என்ற தாகம், ... ... உன்னுல, ... ... உன்னுல ... ? அவன் எச்சிலை விழுங்குகிறான். அவள் நாணம் படர முறுவலிக்கிறாள்.

''ஏன் என்னில? ... ...'' குரலில் தேன் பாய்கிறது அவனுக்கு வார்த்தைகள் பிறக்கவில்லை. கவிதான் பிறக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்றுக்கு மில்லைப் பெண்ணார்
உன்னை விரும்பினது — உன்ட
சஞ்சி சடைக்கும் சரிந்துவிழும்
தேமலுக்கும் ... ...''

கருங்குழல் காளையரைக் கட்டி யிழுப்பது உண்மைதான். ஆனால் இங்கு அவனைக் கவர்ந்துவிட்டிருந் தது. அதுமாத்திரமல்ல.... அவளிட முள்ள ஏதோ ஒன்றும் தான். அதை இத்தனைநாளும் அவன் பார்த்துப் பார்த்து ரசித்ததை அவள் கவனித் தாளோ இல்லையோ, அவன் அதைத் தான் விழுங்கினான். அதற்கு அழுத் தம் கொடுக்கிறான்.

''புத்தப்புதுச் சட்டியிலே
பொன்னுருக்கி வார்த்ததுபோல் —
உன்ட
பொன்னான மேனியிலே
போட்டதுகா நற்தேமல் ... ...''

புத்தம் புதிய சட்டியிலே, பொன்னை உருக்கி வார்த்தால் எப் படியிருக்கும்? - எத்தனை இயற்கை யான - பொருத்தமான உவமை.! அவளுக்குச் சூட்டப்பட்ட பட்டம்! தேமல் அழகி!

அன்று முதல் நாள் கண்டதி லிருந்து, ஒவ்வொருநாளும், அவன் தாகத்தோடு வந்து கொண்டிருக் கிறானே, அதற்கு என்ன காரணம்? அவள் கொள்ளை அழகை - குறுகுறு பார்வையை - இளமைப்பூரிப்பை மறக்க முடியாமையல்ல. புத்தம் புதுச் சட்டியிலே பொன்னுருக்கி வார்த்து வைத்திருக்கும் அந்த வனப்பை மறக்கமுடியாமைதான். அவன் விழுங்கி விழுங்கி இன்னும் மிஞ்சி வழிகிறதே அவள் தேமல் அழகு, அதை மறக்கமுடியுமா?

''தேமலழகி பெண்ணார்
திருநீற்றுப் பொட்டழகி
மார்பழகி வள்ளிப்பிள்ளை — உன்னை
மறக்கமனம் கொள்ளுதில்லே!''

என்கிறான். தலைக்குமேல் ஏறி விட்ட புளகம் அவளுக்கு. இத்தனை புகழ்ந்தால் எந்தப்பெண்தான் மயங்கமாட்டாள். அவள் அவனில் இறங்கி விடுகிறாள்.

இதே போன்றதொரு தேமல் அழகுச் சுவையை குறிஞ்சித் திணை யிலே காட்டுகிறார் கபிலர்.

இதோ அந்தக் காட்சி.

அவள் முகைவிரியாத மொட்டு. காதல் உணர்வு பெறாத கன்னி. ஆனால் அவள் தோற்றம் அவனை வெறிகொள்ளச் செய்கிறது. பந்தா டிச் செல்கிறாள், அந்தப்பாவை. பரு வம் மலராத பைங்கொடிபோலவா காணப்படுகிறாள்! மூங்கிலெனத் திரண்ட தோள்; வெறிகமழ் கருங் குழல்; மானைவென்ற மருட்சி விழி கள், மயிற்சாயல், சிலம்பு ஒலிக்க, மலர்க்கொடிபோல - இடைநுடங்க - மின்னற் கொடிபோல நடக்கிறாள். அவனும் பின்னாலேயே நடக்கிறான். தான் கொண்டகாதலை அவளுக்கு இன்று நேராகவே உணர்த்திவிடுவ தென்பதுதான் அவனது முடிபு.

'சின்னமொழி' என்று அவளை அழைக்கிறான். ''கூடல் நகரில் தேன் பாய மலர்ந்த நீலமலர் போன்ற உனது விழிவேல்கள், யானைப் படை யோடு எதிர்க்கும் பகைவர்களை, பாண் டியனது வேல்பாய்ந்து வருத்துவது போல வருத்துகின்றனவே! இவ் வியல்பு உனக்குத்தகுமா?'' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறான். அவள் கவனிக்கவே யில்லை. ஆயினும் அவன் விட்டானா? ''**கனங்குழாய்!**'' என்று மீண்டும் அழைத்தான்.

''வானம் பொழிந்து வளம் கொழித்த அசோகஞ் சோலையுள், அழகுமிளிர்ந்த இளமாவின் தளிர் போன்றவளே! தேர்ப்படையோடு வந்த பகைவரின் மார்பில் பாய்ந்த பாண்டியனின் அம்பைப்பார்க்கினும் அதிகமான துன்பம் நீதரலாகுமா?'' என்கிறான். இப்போதாவது அவனை கவனிக்கிறாளா? இல்லை; அவன்தான் விட்டகன்றானா?

''வகைவகையான, குளுமையான மலர்மாலைகளையணிந்தபாண்டியனது பொதியமலையின் கண்ணேயுள்ள **வேங்கைமரத்தின் பூப்போன்ற தேமலையுடையவளே!** என்கிறான்.

இங்கு, தேமல் அழகினை,

''வகையமை தண்தாரான்
கோடுயர் பொருப்பின்மேல்
தகையிணர் இளவேங்கை
மலரன்ன சுணங்கினாய்'' **என்ற**

வரிகளாகச் சுவைக்கத் தருகிறார் கபிலர். கிராமியக் காதலனின் வாயாலான தேமலழகினையும் இந்தச் சங்க இலக்கியத் தேமல் அழகினையும் ஒருங்கு வைத்துச் சுவைகாணும் பொழுது, உண்மையிலேயே நாம் சங்ககாலத் தமிழர் நிலைக்கு உயர்ந்து விட்ட உணர்வு பிறக்கிறது.

காதலரிடையே நிகழும் பிரிவென்பது கனல் போன்றது. அன்றும் இன்றும் அது ஆற்றொணாத் துயர் தருவது.

அந்தக் கிராமத்து இளங்குமரியை அவன் காதலித்து மணந்து கொண்டான். காதல் மணமென்றால் கைப்பொருள் கரையாதிருக்குமா? பொருளீட்ட அவன் போகப்புறப்பட்டான். அந்தப் பிரிவை நினைக்கவே அவள் துணுக்குற்றாள்; துடித்தாள்; எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தாள். எப்படியாவது அவளை ஆற்றவேண்டுமே; சமாதானம் சொல்கிறான்.

''வங்காளம் போறே னென்று
மனக்கவலை கொள்ளாதே — உன்ட
சிங்காரக் கொண்டைக்கொரு
சீப்புவாங்கி நான் வருவேன் ... ...''

சீப்பைக்கண்டதும் அவள் நினைப்பு வந்துவிடும். உடனே புறப்பட்டு வந்து விடுவானாம். இது கிராமியக் கவிச்சுவை. இதே சுவையைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ நமக்குத் தருகிறார்.

'அன்பே, நான் விரைவில் மீண்டுவிடுவேன்' என்கிறான் அவன். இல்லை நீங்கள் என்னை மறந்து, நெடுநாள் தங்கிவிடுவீர்கள். நான் பிரிவுதரியேன்? என்று விசும்புகிறாள், அவள்.

''நான் போகும் காட்டுவழி கனல்போன்ற வெம்மையுடையது. அங்கே கன்றுகலக்கிச் சேறாக்கிய சிறுநீரையும் தன் காதலிக்கு முன்பே ஊட்டிய பின்னரே களிறு உண்ணும். அதைக்காண உன் நினைவு வந்துவிடும். அந்தவழி இலைகள் காய்ந்து உதிர்ந்த நிழலற்ற கொடுமையுடையது. அங்கே வெப்பம் தாங்காது வருந்தும் தன்பெடைக்கு தன் மெலிய சிறகைவிரித்து ஆண்புறவு நிழல் கொடுக்கும். அதைக் கண்ணுற்றபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் உன்நினைவு எனக்கு வராமலிருக்குமா? மலைமேல் வளர்ந்த மூங்கில்கள் பட்டுப்போமாறு வெய்யில் காயும் கொடுமையுடையது அந்தக் காட்டுவழி. அங்கே நிழல் இல்லாமல் துன்புறும் தன்பிணைக்குத் தன் உடல் நிழலைக்கொடுத்துதவும் கலைமான். அப்போது உன் நினைவு வராமலாபோகும்? உடனே வந்து விடுவேன்'', என்கிறான் அந்தத் தலைவன்.

''அடிதாங்கும் அளவின்றி அழலன்ன
வெம்மையால்
கடியவே கனங்குழாய்!
காடு ... ... அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய
சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு......
இன்பத்தின் இகந்தொரீஇ
இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவேகாடு ... ...
அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை
அசைஇய வருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவு...
கன்மிசை வேய்வாடக் கனைகதிர்
தெறுதலால்
துன்னரும் தகையவே காடு ... ...
அக்காட்டுள்
இன்னிழல் இன்மையால் வருந்திய
மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை .. ''

இந்தச் சங்க இலக்கியப் பண்பை கிராமியக்காதலனின் கள்ளங்கபட மற்ற நாவினுற் கேட்டுச் சுவைக்கும் போது பிறக்கும் இரசனையே ஒரு தனி அலாதி.

பதினுறும் மறையாத பருவ மங்கை அவள். அந்தக் கிராமிய இளைஞன் பலமுறை தனது காதலை அவருக்குணர்த்தியும் அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இதை அறிந்த உலகம் அவனை நையாண்டி செய்தது. ஆனுலோ, அவனை அவனுல் மறக்கவே முடியவில்லை, வழிமறித்துக் கேட்கிருன்.

''உன்னுசை கொண்டு மச்சி
உலகமெல்லாம் தூராானேன்
என்னுசை உன் மனதில்
எள்ளளவும் இல்லையேகா!''

இத்தனை அவன் பணிந்து இரந்தும் கூட அந்த இறுமாப்புக்காரிக்கு இரக்கம் பிறக்கவில்லை. அவனை முறைத்துப் பார்த்தாள். எடுத்தெறிந்துபேசி ஒதுக்கினுள். அவனும் ஆண்பிள்ளையல்லவா!

''பழிகள் தான் வந்தாலும்
பத்தெட்டிறுத்தாலும்
கழுவி லிருந்தாலும் — இப்ப
காணபேண்டி உன்னுசை ... ...''

இத்தகைய ஒரு காட்சியைச் சோழன் நல்லுருத்திரன் காட்டுகிருர். இடையன் ஒருவன். அந்த இடைச்சிமேல் அளவற்ற காதல் அவனுக்கு. ஆனுல் அவளோ அவனை ஒதுக்கினுள். அன்று அவள் கவணுேடு காடுநோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது தடுத்து நிறுத்தினுன் அவன்.

''விடேஎன், தொடீஇய
செல்வார்த்துமித்து எதிர்மண்டும்
கடுவாய நாகுபோல் நோக்கித்,
தொழுவாயில்
நீங்கிச் சினவுவாய் மற்று'' —

போகவிடேன். போகப்போகிருயா? தடுப்போரைத் தள்ளி மோதி விட்டுப் போகும் எருமை நாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல, முடியுமானுல் என்னைத் தள்ளி விட்டுப்போ, பார்க்கிறேன்,'' என்கிறுன்.

''நீ, நீங்கு, கன்று சேர்ந்தார்கள்
கதவு ஈற்றுச் சென்றுங்கு
வன்கண்ணன் ஆய்வரல் ஓம்பு''

'விட்டு விலகு, என்தாய் கண்டால், தன்கன்றை அண்மியவர் மேல் சினம்கொண்டுபாயும் ஈன்ற பசுப்போல சினம் கொண்டு உன் மேற்பாய்வாள்' என்கிருள். அவஞ விடுபவன்?

''யாய்வருக, ஒன்ரே பிறர்வருக,
மற்று நின்
கோவரினும் இங்கே வருக,
தளரேன்யான்''

'உன் தாயென்ன, உன்சுற்றத்தார் முழுப்பேரும் வரட்டும், ஏன் உன் அப்பனே வரட்டும் பார்க்கிறேன்' .... .... என்று வல்லுக்கு நிற்கிறுன் அவன். அதன் பிறகென்ன? அவள் வழிக்கு வருகிருள். இவ்விரண்டையும் ஒப்பிட்டு இரசிக்கும்போது ஏற்படும் சுவையே ஒரு தனிதான்.

''திமிலைத்துமிலன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vignettes of Batticaloa

When I want a change from the hill-country – one occasionally needs a change from the best of things – my thoughts turn to the East Coast and the jungle roads that lead thither.

Alone of lowland regions it rivals the hill-country in scenic beauty.

First, there is the sea.

Then, the sand in splendid prodigality; and in places, a great solitude.

Immense bays, with the infinitude of the sea lie cradled in their vastness, elemental in their fascination.

And, beside the sea, lagoons, their calm waters setting off the restless beauty of the ocean.

The heart-delighting sight of paddy, rippling green and waving gold, stretching as far as the eye can see, against the blue backdrop of the distant hills.

Acres of coconut, in their regimental ranks, offering welcome shade in noonday heat.

And the jungle, some of it Veddah country, with its wealth of plant and animal life, and its secrets.

The East Coast is also the gourmand's delight; he has the rich and varied produce of field, forest and sea to choose from.

Causeways to teach the hurrying traveller patience; unnumbered, with their black-and-white gauges, palm-fringed, sun-drenched, sea-splashed. As I write, sunlit Komari flashes on my mind–. It is a picturesque spot between Panama in the south and Pulmoddai in the north.

Along the coast a number of attractively sited Rest Houses, pleasant retreats from the fever and fret of the world: Arugam Bay, Sinnamuhattuvaram, Kalmunai, Kalkudah, Vakkarai, Kuchchaveli.

The people, too, are interesting; blood and tongues mingle in varying proportions: Tamil, Moor, Sinhalese, Veddah, Portugese. Accent, customs, manners. All are peculiar to the Eastern Province, and are not without charm.

There is music in such place names as Singamankudah, Tampiluvil, Periapullumalai, Addalaichchenai, Kaluvanchikudiyiruppu, Sammanthurai, Sainthamaruthu ... A study of their origins would be rewarding. Do crocodiles still bask in the sun at Muthalaikudah? And is that 'maruthu' tree still leaning at Sainthamaruthu?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Back of it all, for those who care for such things, are history and tradition, coloured with a wealth of legend, spiced with an infusion of romance.

To me, in addition to all this, there are the recollections of a boyhood spent at Puliyanthivu and holidays spent on the East Coast; and every journey thither is in some measure a sentimental attempt to recapture the memories of that distant and carefree past.

Memories come crowding in upon me ...

Of schooldays, with their joys and pains ... Of a Principal, a chaplain to the British Armed Forces during the First World War, parson, cricketer, stern disciplinarian, unhappily cut off in the prime of life ... Of a schoolmaster, still, happily with us, later Principal of the school, who has made the jungles of the Eastern Province his happy hunting-ground ... Of another, from the north, who, suffering shipwreck off Kalkudah, in the days of the round-the-Island steamship service, swam to safety, and still lives to tell the epic tale ...

Of holidays at the Bar. Does anybody go there for a holiday anymore ...-? and at Thirukovil ?

Of the building of Kalladi Bridge ...

Of the ferry between the Dutch Fort and Kalladi ...

Of the first train to Batticaloa in 1928 ...

Of my first journey by train the same year to school in Jaffna ...

Of the old cemetery, where, among other celebrities, the coachman of a former Governor of Ceylon lay buried ...

Of Collette's buses which enabled the illustrated Sunday papers to be delivered on Tuesday morning in town ...

Of schooners from Jaffna, lying at anchor beside the Customs Jetty, while their sailors bathed on deck washing off the salt of the sea from their bodies with fresh water, amidst the appetising odours issuing from the ship's kitchen. To a boy's active imagination they embodied the romance of all the seas ...

Of the planters' steamboat, which transported the coconut produce of the area, and of its noontime signal .

Of another time-signal, at a quarter-past four, from the Kachcheri-why at a quarter-past four, I have not been able to ascertain ...

Of boating excursions on the lagoon by day, after the King's Birthday parade ... Of moon light excursions to hear the 'Singing Fish' ...

The lagoon imparts to Batticaloa its distinctive charm.

For more than thirty miles, it stretches its sinuous length, from Chenkaladi in the north to Kalmunai in the South. Embracing a number of a little islands in its broad bosom, and peeping into tiny villages, it carries a message of indolence and peace, and imparts an air of enchantment wherever it spreads. It helps the coconut planter, it feeds the fisherman, and charms the visitor; by day, a minor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

trade route; by night, a fishing-ground; by day a pleasure-resort.

On moonlight nights the lagoon becomes a thing of beauty. On nights when the water turns phosphorescent, you can see the fish swim about some feet beneath the surface of the water. Canoes glide by, leaving trails of silver behind them, and the whole lagoon seems to be lit by a wondrous submarine light. I have not seen anything of its kind elsewhere.

But the waterway is not without its tale of tragedy. Many a bather has lost his life in the mud and tangle of the lagoon floor, and many a picnicker, who had set out on a night's boating expedition, has paid the price of his carelessness. And suicide has found the lagoon a handy means of escape from the troubles of this world.

The lagoon has always attracted me from the time when, as a schoolboy, I lived within sight of it, and had always wanted to travel its whole length by boat; and I realised this wish some years ago when I travelled in the 'Singing Fish' from Kalmunai to Puliyanthivu. It was broad daylight now, and I could see the sights by the way: the harvesting and irrigation scenes - the cool recesses of the lagoon, where the vegetation reaches down to the water's edge, the ferries that cross the lagoon at intervals, the people waiting for the ferry-boat, the naked urchins who swam out to meet our boat, the white birds which, at some sudden disturbance, flitted away in a white cloud from the trees...

Of the approaches to Batticaloa by road, I like best the one from the south, with its views of the lagoon and the sea and the vast stretches of paddy-land. Harvest time is, more than any other, the time to take that road. Everywhere, there are scenes of activity then. Whole villages seem to empty themselves of people into fields. Moormen, cultivators here, and not traders as elsewhere, women and children in their colourful clothes, cut, thresh and winnow. In places where the harvest has been gathered, the straw lies in shapely heaps, in appearance like kirghiz tents, kept in shape with a cane frame. On top is a crest of straw, crowned with a white flag.

Kalladi, with its broad road and its margosa trees, beautiful with their delicate filigree foliage, is a pleasant suburb of Batticaloa, and could be made its administrative centre. The Kachcheri and other Government offices could be moved out there and the old town could be left to its dream of the past. Or, it could be an acceptable, well - planned residential area, the wide beach being within easy reach.

But it is the road from the west that I take most often because it leads directly from the hills. After Maha Oya has been passed, when the land opens out and the fields begin to stretch away and the road becomes a causeway through a green of paddy, one feels a sense of release, a sense of freedom. Then comes the long drive beside the lagoon with its view of the town.

The northern road, with its half-a-dozen ferries, has been out of use for some years.

Batticaloa has changed but little. The Old Residency and other stately government homes have fallen into decay, but have not yielded place to modern structures. To look from the Government Agent's present house towards Erumaitivu is to be transported backward into time. One can stand in his office in the old Dutch fort and gaze out over the lagoon and feel 'the centuries blend and blur' as the anemometer on the ramparts revolves lazily in the idle wind. The punkah of the office is no more, but the stout walls, the high roof and the wooden floor remain. So do the fading group photographs with past, white, government agents as central figures. In the adjoining room, a typewriter clicks, worked by the deft fingers of an English-and-Tamil speaking girl of Portuguese descent. She speaks Tamil more easily than English, which is really the third language of many of her community, who speak Portuguese of a by-gone age.

One night I sat on the old pier beside the Dutch fort. How restful to the eye the scene was after the long journey over the hills!

S. K. GNANAMUTTU.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கூத்து

இயற்கையோடு ஒட்டி வாழும் கிராமிய மக்கள் வளர்த்த அழகுக் கலையே நாட்டுக்கூத்து. இது கிராமிய மக்களின் உணர்ச்சிகளையும் செயல்களையும் வெளியிடும் சாதனமாகும். நாட்டு மக்களின் உள்ளக் கருத்து, குணச் சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்து விளக்குவது நாட்டுக்கூத்து.

இந்நாட்டுக்கூத்து மிகப் பழைய காலத்திருந்தே யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், மட்டக்களப்புப் போன்ற இடங்களில் ஆடப்பட்டு வந்தது. சிலாபப் பகுதியில் முனீஸ்வரம், மருதங்குளம் போன்ற இடங்களில் விழாக் காலங்களிற் கோயில் முன்றிலில் மார்க்கண்டன் நாடகம், வாளபிமன் நாடகம் போன்றவை இன்றும் நடிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்திற் பண்டைக் காலத்திற் கூத்துக்களையும் விலாசங்களையும் நடித்தனர். இன்று இவற்றை அங்கு ஆடுவோர் ஒரு சிலரே. மட்டக்களப்பிலே மக்களின் சமய வாழ்க்கையோடு ஒன்றுபட்டுப் பெரும்பான்மையான இடங்களிலே கூத்துக்கள் ஆடப்பட்டுவருகின்றன. அங்கும் வடமோடிக் கூத்துக்களே பெரும்பாலும் வழக்கிலிருக்கின்றன. தென்மோடிக் கூத்தும் விலாசமும் மிகவும் குறைவாகவே இன்று அங்கு ஆடப்படுகின்றன.

